ISSN 1391-9504

# விஜய்

Vijey විජයි

15.02.2006 - மலர் 02, இதழ் 26




## திட்டமிடல் இருந்தால்...



## எறும்புகளின் வாழ்க்கை



## இறப்பரின் வளர்ச்சி



## மலைகள் வளர்கின்றன...

விலை 10/=

பன்முக அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தயாரிப்பு - நவசீலன்

# பாட்டுக்குப் பரிசு தலை

ஈட்டியெழுபது பாடுவதற்கு ஒட்டக்கூத்தர், ஒரு பாடலுக்கு ஒன்று வீதம் எழுபது பாடல்களுக்கும் எழுபது தலைச்சன் பிள்ளைகளின் தலைகளைப் பரிசாகத் தரவேண்டும் என்று கேட்டதை அடுத்து, செங்குந்தர்கள் பீதியடைந்த நிலையில் மௌனமாக இருந்தனர்.


சிறிது நேர மௌனத்துக்குப் பின்னர் ஒட்டக்கூத்தர் அவர்களிடம், "நான் கேட்ட கேள்விகளுக்கு நீங்கள் ஒன்றும் சொல்லாமல் இருப்பதேன்?" என்று கேட்டார்.

அதற்குச் செங்குந்தர்கள் "ஐயா, உங்களுக்கு என்ன பதில் கூறுவதென்றே எங்களுக்குப் புரியவில்லை. நாங்கள் என்ன செய்வோம். நம்முடைய மரபின் மகிமை விளங்கும்படி பாடல் பாட வேண்டு மென்றுதான் நாங்கள் உங்களைக் கேட்டோம். தாங்களோ தலை கொடுக்க வேண்டுமென்கிறீர்கள். பாட்டுக்காகத் தலை கொடுத்தவர்கள் யார்? கேவலம் அசாத்தியத்தில் கொண்டு வந்து விட்டீர்களே" என்றார்கள்.

அதற்கு ஒட்டக்கூத்தர் புன்சிரிப்பு ஒன்றை உதிர்த்து விட்டுப் பின்வருமாறு கூறினார். "என்ன சொல்கிறீர்கள்? யானை மேல் ஏறுவேன். வீரமணி கட்டுவேன். அகப்பட்டோரின் தலைகளை உடைப்பேன் என்று கூறும் விளையாட்டுப் பிள்ளைகளுக்குள்ள வீரம் கூட உங்களுக்கு இல்லையே! யார் தலை கொடுப்பார்கள் என்கிறீர்களே. குமணராஜன் காட்டில் போய் இருந்தபோது, அவன் தம்பியாகிய அமணராஜன், "யாராவது என் தமையனின் தலையைக் கொண்டு வந்து கொடுத்தால் அவருக்கு ஒரு கோடிப் பொன் கொடுப்பேன்" என்று கூறியிருந்தான். அந்தச் சமயத்தில் ஒரு வித்துவான் குமணன் மேல் கவி பாடிக்கொண்டு போய்ப் பரிசு கேட்டான். அப்போது குமணன், "நான் செல்வமுடையவனாக இருந்த காலத்தில் நீங்கள் வரவில்லை. வறுமையில் வாடிக் கொண்டு இருக்கும் இக்காலத்தில் வந்திருக்கிறீர்கள். ஆனாலும், பரவாயில்லை. என் தலையைக் கொண்டு போய் அமணனிடம் கொடுத்து அவன் அதற்காகக் குறித்த திரவியத்தை வாங்கி உங்களின் வறுமையைப் போக்கிக் கொள்ளுங்கள் என்னும் கருத்தை உள்ளடக்கி...

"அந்தநாள் வந்திலை அருங்கவிப்
புலவோய்!
இந்த நாள் வந்தெனை நொந்து நீ
அடைந்தாய்!
தலைதனைக் கொடு போய்த்
தம்பிகைக் கொடுத்து
விலைதனை மீட்டுன் வெறுமை
நோய் களையே!"

என்று ஓரகவல் பாடித் தன் உடைவாளையும் உருவி அந்தப் புலவன் கையில் கொடுக்கவில்லையா?"



"ஒரு வணிகனுக்காகப் பழையனூரில் வேளாளர் எழுபது பேர் தங்கள் உயிர்களைக் கொடுத்துச் சத்தியத்தை நிலைநிறுத்தவில்லையா? இந்தப் பிரதேசத்திலேயே சில காலத்துக்கு முன்னர் ஓர் ஊரில் நிறையேரியில் அலை அடிக்க அதன் கரையின் ஒரு பக்கத்தில் கொஞ்சம் மண் கரைந்தோடியதை அருகில் இருந்த ஓர் உழவன் கண்டு 'இனி இரண்டொரு நிமிடம் சும்மாயிருந்தால் கரை உடைந்து போகுமென்றும், அந்த இடத்தை மண்வெட்டி போட்டு அடைத்துப் பலப்படுத்துவோமானால் அதற்கு அவகாசமில்லையென்றும் கூறி முதலுக்கே மோசம் வருமென்றும் நினைத்துக் கவலையடைந்து தன்னுடன் உழவுத் தொழில் செய்து கொண்டு இருந்தவனைப் பார்த்து, "நீ இந்தத் தர்மசங்கடமான நேரத்தில் முன் பின் யோசிக்காமல் என்னை வெட்டியெடுத்து அந்த உடைவாயில் போட்டு அடை" என்று கூறினான். "அவனும் அப்படியே மண்வெட்டியினால் அவனை இரண்டு துண்டுகளாக வெட்டிப் போட்டு அடைக்கவில்லையா?"

உதார புருஷருக்குப் பொருளும், சுத்த வீரருக்கு உயிரும் முக்கியமா? நம் முன்னோர்கள் உயிரை விடுவத்கு அஞ்சாத அதிசூரர்களாக இருந்தார்கள் என்பதை நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? புலியானது பூனையாகிப் போய் விட்டது போல இப்படி அதைரியப்பட்டுப் பின்வாங்கும் உங்களுக்குப் பாடல் வேண்டுமென்னும் ஆசை ஏன் வந்தது? அந்த எண்ணத்தை விட்டு விடுங்கள்" என்று கூறினார் ஒட்டக்கூத்தர்.

(தொடரும்......)




விஜய் மாணவர் கழக விண்ணப்பப் படிவம், முகவரிக் கூப்பன், குறுக்கெழுத்துப் போட்டிக் கட்டங்கள் என்பனவற்றை வெட்டி அனுப்புவதால் மறு பக்கத்திலுள்ள கிடைத்தற்கரிய தகவல்களைப் பாதுகாத்து வைக்க முடியாமலிருக்கிறது. இதற்கு மாற்று வழி உண்டா?

எம்.பென்யமின், மன்னார்.

இது தொடர்பாக காலப்போக்கில் நடவடிக்கை எடுப்போம். ஆ-ர்.

"விஜய்" இல் வெளிவரும் விண்வெளித் தகவல், படிப்பினைக் கதை, இலக்கியச் சோலை என்பன என்னை மிகவும் கவர்ந்தவை. மேலும் விவாதம் போன்ற அம்சங்களையும் சேர்த்துக் கொண்டால் நன்றாக இருக்கும்.

கருப்பையா இராமேஸ்வரி, மத்துகம.

புதன்தோறும் என் இல்லம் வந்து என் மனதில் வசந்தம் தரும் என் அபிமான விஜய்யே, நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் என் மனதில் இடம் பிடித்தவைதான்.

சிறீஸ்கந்தராஜா அசோக்கமாலா, உடுப்பிட்டி.

விஜய்யில் வெளிவரும் கதைகளையும், அதிசயங்களையும் மிகவும் விரும்பிப் படிப்பேன். விஜய் மேலும் மேலும் வளர வாழ்த்துக்கள்.

எ.சஞ்சிகா, கல்வியங்காடு.

வரலாற்றிலிருந்து என்று தொடர்ந்து வரும் பகுதி எனக்கு மிகவும் உதவுகின்றது. ஏனெனில் சமூகக்கல்வியில் வரலாற்றைப் படிக்கும் போது இந்த வரலாற்றிலிருந்து எனும் பகுதியிலிருந்து மேலும் குறிப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

ஏ.எப்.கே.சிதாரா, கண்டி.

அற்லஸ் சித்திரப் போட்டிக்கு அனுப்பப்படும் சித்திரங்கள் போட்டிக்கோ, கண்காட்சிக்கோ தெரிவு செய்யப்படாவிட்டாலும் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்கள் அவ்வப் பாடசாலைகளுக்குரிய அனுப்பி வைக்கப்படும் என்று குறிப்பிட்டு இருந்தீர்கள். அவ்வாறு சான்றிதழாவது அனுப்பி வைப்பீர்களா?

யோ.சுயேந்தினி, கிளிநொச்சி.

விண்ணப்பதாரர்களில் இருந்து தெரிவு செய்யப்படும் 300 பேர் கொழும்புக்கு அழைக்கப்பட்டு வரையும் சித்திரங்களில் இருந்து தெரிவு செய்யப்படுபவர்களுக்குப் பரிசில்களும் தெரிவில் இடம் பெறாதவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும் என்றே குறிப்பிடப்பட்டிருந்தது. ஆ-ர்

"விஜய்" பத்திரிகையில் வெளிவரும் விடயங்கள் பயனுள்ளவை. விஜய் பத்திரிகையை வாசித்து முடிந்தவுடன் அடுத்த இதழ் எப்போது வருமென்று காத்துக் கொண்டிருப்பேன்.

ந.மோகன்லால், தம்பிலுவில்-2.

விஜய் பத்திரிகையில் வெளிவரும் விண்வெளிப் பகுதி சிறுவர்கள் முதல் எல்லோருக்கும் பயன் தருகின்றது. மற்றும் கணிதப் பாடப்பயிற்சிகளையும் பிரசுரிக்குமாறு பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏ.எம்.தாஹிர், ஹொரவப்பொத்தானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில்

இலங்கை அரசியலமைப்புச் சட்டம் இலங்கைப் பிரஜைகளின் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பில் மிக உயரிய பாதுகாப்பு வழங்குகின்றது. அதற்கு முரணாக அரச அதிகாரிகளுக்கும், பொலிஸாருக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் மிதமிஞ்சிய நிர்வாக நிறைவேற்று அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளதால் இலங்கையில் கட்டுக்கடங்காத மனித உரிமை மீறல்களும் இடம் பெற்றுவருகின்றன.

இலங்கை அரசியலமைப்புச் சட்டம், அத்தியாம் 3, உறுப்புரைகள் 10 முதல் 17 வரையிலும் மற்றும் உறுப்புரை 126 முதலியன அடிப்படை மனித உரிமைகளான சிந்தனை, மனச்சாட்சியைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம், காரணமின்றிக் கைது செய்ய முடியாமை, சித்திரவதைக்கு எதிரான பாதுகாப்பு, சட்டத்தின் முன் சகலரும் சமன் மற்றும் சமமான பாதுகாப்பு, இன, மத, மொழி, பால், அரசியல் கொள்கை, பிறப்பிடம் முதலான விடயங்கள் தொடர்பில் பாரபட்சம் காட்டப்படுவதனைத் தடை செய்வதுடன் மீறப்பட்டால் அதற்குரிய பரிகாரமும் வழங்குகின்றது. எனினும், அதே அரசியலமைப்புச் சட்டம் தேசிய பாதுகாப்பு என்ற போர்வையின் கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும், பாராளுமன்றத்துக்கும் அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் முதலானவற்றை ஏற்படுத்தி மேற்படி மனித உரிமைகளை மீறிச் செயற்படவும் வழி வகுக்கின்றது.

அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான சட்டக் கோட்பாடு 14 ஆம் நூற்றாண்டில் பிரித்தானிய நீதிபதி சி.ஜே.கோக் (C.J.Koke) என்பவரின் "அரசனை உருவாக்குவதும் சட்டமே என்பதால், அரசனும் சட்டத்துக்கு உட்பட்டவனே" என்ற தத்துவத்திலிருந்து உருவாகின்றது. இவருக்கு முன்பு வாழ்ந்திருந்த எழுத்தாளரும் தத்துவஞானியுமான அரிஸ்டோட்டல் "தனி மனித ஆட்சியைவிடச் சட்ட ஆட்சியே சிறந்தது" என்று ஆணித்தரமாக வாதிட்டார். இதிலிருந்து சட்ட ஆட்சிக் கோட்பாடு மனித உரிமைக் கோட்பாட்டின் அடிப்படை அம்சம் ஆகியது.

19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த 'டைசி' என்ற சட்ட அறிஞர் பிரித்தானிய அரசியலமைப்புச் சட்டம் தொடர்பில் பின்வரும் கருத்துக்களை முன் வைத்தார். அவர் கூறினார் "பரந்த தண்மதி அதிகாரம் (தீர்மானிக்கும் அதிகாரம்) ஒருவருக்கு வழங்கப்படுமாயின் அது எதேச்சதிகாரத்துக்கு இட்டுச் செல்லும், ஒருவர் நாட்டின் சாதாரண சட்டத்தை மீறி இருந்தாலன்றி வேறெந்த விதத்திலும் தண்டிக்கப்படலாகாது, சட்டத்தின் முன் பதவி, அந்தஸ்து பாராது சமமாக மதிக்கப்படல் வேண்டும்" என்றார். எனினும், இதற்கு முரணாக எமது அரசியலதிகாரச் சட்டத்தில் நிர்வாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும், அவசரகாலச் சட்டம் வாயிலாகப் பாதுகாப்புத் துறையினருக்கும் பரந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

என்றபோதும் சட்டத்துறை மீது நீதித்துறையானது பின்வரும் மீளாய்வுக் கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கின்றது. அதன் பிரகாரம் சட்டத்துறையானது அரசியலமைப்புக்கு முரணான சட்டங்களை ஆக்கமுடியாது, ஏற்கனவே அனுபவித்து வந்த உரிமைகளைப் பாதிக்கும் வகையில் சட்டம் ஆக்க முடியாது, குற்றவியல் வழக்கொன்றில் குற்றம் சாட்டப்பட்ட நபர் குற்றம் நிரூபிக்கப்படும் வரை நிரபராதி என்றே கருதப்பட வேண்டும், நபரொருவர் கைது செய்யப்படும் போது காரணம் தெரிவிக்கப்பட வேண்டும், குற்றம் சாட்டப்பட்ட நபர் தனது தரப்பு நியாயத்தை எடுத்துக்கூறப் போதுமான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும், எந்தக் குற்றத்துக்கும் உரிய தண்டனையன்றி மிதமிஞ்சிய தண்டனை வழங்கப்படலாகாது, நீதிமன்ற விசாரணைகள் பகிரங்கமாகவே நடத்தப்பட வேண்டும்.

கடந்த மூன்று தசாப்த காலங்களாக அவசர காலச்சட்டம், பயங்கர வாதத் தடைச்சட்டம் வாயிலாக ஆயிரக்கணக்கான இளைஞர்கள் காரணமின்றியும், ஏதேச்சதிகாரமாகவும் கைது செய்யப்பட்டு விசாரணையின்றிச் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர். போர் நிறுத்த உடன்படிக்கை அமுலில் இருந்த போது மிகக் குறுகிய காலத்துக்கு இவை நிறுத்தப்பட்டிருந்தாலும் இப்போது மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியிருக்கின்றது.

Vijey விஜய்

விஜய

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
இல:08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02
தொலைபேசி: 2314714, பெக்ஸ்: 2314968

# மாணவர் அனுமதிக்கான புதிய செயற்திட்டம்

மாணவர்களைப் பாடசாலைகளில் அனுமதிக்கின்ற விடயத்தில் பொதுவான செயற்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தவுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய பாடசாலைகளும், மாகாண மட்டப் பாடசாலைகளும் இரு வேறுபட்ட முறைகளிலேயே மாணவர்களை அனுமதிக்கின்றன. இவ்விரண்டுமே அரசாங்கப் பாடசாலைகளாக உள்ள போதிலும் இருவேறு நடைமுறைகள் இருப்பதால் பெற்றோர் இது குறித்துத் தொடர்ந்து அதிருப்தி தெரிவித்து வருகின்றனர்.

இதனை நன்கு ஆராய்ந்த கல்வியமைச்சு, அடுத்த வருடத்திலிருந்து இதற்கான புதிய செயற்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

தேசியப் பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதில் கல்வி அமைச்சு நேரடியாகத் தொடர்புபடுகிறது. மாகாண மட்டப் பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதில் கல்வி அமைச்சின் தலையீடு இருப்பதில்லை.

இவ்விரு நிலைப்பாடுகளினாலும் பெற்றோரும் மாணவர்களும் தான் அதிக பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். இந்நிலைமையை மாற்றுவதற்குக் கல்வியமைச்சு நடைமுறைப்படுத்தவுள்ள புதிய செயற்திட்டத்தின் மூலம், மாணவர்களை அனுமதிப்பதில் பாடசாலை நிர்வாகம் பூரண அதிகாரம் கொண்டதாக இருக்க வேண்டியும் இதனால் எதிர்நோக்குகிற பிரச்சினைகளைக் குறைக்கவுமே கல்வியமைச்சு இம் முடிவினை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# டெங்குவை ஒழிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துமுகமாகவும், டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தை ஒழிக்குமுகமாகவும் சுற்றுச்சூழலைத் தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டமொன்றினை இலங்கை முழுவதிற்கும் நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக டெங்கு நோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியான டொக்டர் ஹசித்த திரேசா தெரிவித்துள்ளார். இலங்கையிலுள்ள 297 சுகாதார வைத்திய அதிகாரிகளின் பிரிவுகளிலும் சுகாதார அமைச்சு இவ் வேலைத்திட்டத்தினை முன்னெடுக்கவுள்ளதாகவும், சுற்றாடலைத் தூய்மையாக்கும் இப்பணிகள் எதிர்வரும்



ஏப்ரல்-ஒகஸ்ட் வரையான மாதங்களில் நடைபெறும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்காக உள்ளூராட்சி மன்றங்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் கூட அமைச்சு கோரியுள்ளது.

டெங்கு நோய்க்கான முதற் காரணியாக பொலித்தீன், பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையே இருக்கிறதென்று சுட்டிக்காட்டியுள்ள சுகாதார அமைச்சு, இனிவரும் காலங்களில் இவ்விரு பொருட்களின் பாவனைகளுக்குத் தடைவிதிக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த வருடத்தில் மட்டும் 28 பேர் டெங்கு நோயினால் இறந்துள்ளனர். 5958 பேர் டெங்குவினால் பீடிக்கப்பட்டிருந்தனர் என்றும் 300 ற்குட்பட்டவர் அபாய கட்டத்திற்குச் சென்று மீண்டுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சின் அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

கடந்த டிசம்பர் மாதத்தில் மட்டும் 698 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருக்கிறார்கள். இதனைக் கருத்திற் கொண்டு பொது மக்கள் சுகாதார அமைச்சின் நடவடிக்கைகளுக்கு உதவும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

# இளம் கண்டுபிடிப்பாளருக்கு சாகித்திய விருது



மத்திய மாகாண தமிழ்க் கல்வி இந்துக் கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற "மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா 2005" இல், மலையகத்தின் இளம் கண்டுபிடிப்பாளரான இரா.மதன்குமார் இளம் கண்டுபிடிப்பாளர் துறைக்கான சாகித்திய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

மேற்படி சாகித்திய விழா கடந்த ஜனவரி 28 ஆம், 29 ஆம் திகதிகளில் நுவரெலியா சினிசிட்டா கலையரங்கில் நடைபெற்றது. ஹட்டன் குடா ஓயாவைச் சேர்ந்த இரா.மதன்குமார் நு/கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் என்பதும் மலையகத்திலும், தலைநகரிலும் பல கண்காட்சிகளில் பங்குபற்றி தனது அரிய கண்டுபிடிப்புக்களை வெளிப்படுத்தியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வாசகர் அறிவுப் போட்டி

Vijey விஜய

விஜய்

வாசகர்களே! இம்மாதம் (பெப்ரவரி) 1ஆம், 8ஆம், 15ஆம், 22 ஆம் திகதி "விஜய்" இதழ்களை உன்னிப்பாக வாசிப்பதுடன் அவற்றை பாதுகாத்தும் வையுங்கள். இந்த இதழ்களில் உள்ள விடயங்களில் இருந்து வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றுக்குச் சரியான விடையளிக்கும் 3 அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குப் பெறுமதிமிக்க கல்குலேட்டர் (Calculater) அல்லது டி.வி கேம்ஸ் (T.V.Games) பரிசுகளாக வழங்கப்படும்.

- போட்டி ஒவ்வொரு மாதமும் நடைபெறுவதுடன் வினாக்கள் மாதத்தின் முதல் வாரத்தில் பிரசுரிக்கப்படும்.
- நான்கு மாதங்களுக்கொருமுறை மாபெரும் பரிசுக் குலுக்கல் மூலம் மேலும் மூன்று அதிர்ஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு உயர் பெறுமதியிலான பரிசுகள் வழங்கப்படும்.

**வாசகர்களே போட்டியில் பங்குகொள்ளத் தயாராகுங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் தலைகளின் வரலாறு



தபால் தலைகளைச் (முத்திரை) சேகரிப்பதன் மூலம் பொழுதுபோக்காகவும், பொருளாதார ரீதியாகவும் பல நன்மைகளை அடைய முடியும். ஆயினும் விலைமதிக்க முடியாததும் அரிதானதுமான முத்திரைகளுக்கே சர்வதேச ரீதியாகப் பெருமளவு கிராக்கி ஏற்படுவதுண்டு. அதற்கென்று இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் தனியான தபால் தலை ஏலம் விடும் தரகர்களும், சந்தைகளும் உள்ளன.

## தபால் தலைகளைப் பிடிக்கும் குரடு (பிடிகருவி)

கை விரல்களால் முத்திரைகளைப் பிடித்துப் பராமரிக்கும் போது ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து தவிர்த்துப் பக்குவமாகப் பாதுகாப்பதற்கு அதற்கென்று வடிவமைக்கப்பட்ட பிடி கருவியைப் (குரட்டைப்) பயன்படுத்த வேண்டும்.

## உருப்பெருக்குக் கண்ணாடி

தபால் தலைகளில் உள்ள சிறிய எழுத்துக்கள் வாசகங்களைப் படித்துப் பார்க்கவும் மறைந்துள்ள மர்மங்களைக் கண்டறியவும் உருப்பெருக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படுகிறது. .

## தபால் தலை செருகேடு

1. பாவிக்கப்பட்ட தபால் தலைகளை சேகரிக்கச் செருகேடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

2. 2X15 சென்றிமீற்றர் அளவு சிறிய மென்மையான காகிதம்.

## அல்பம்

முத்திரை சேகரிப்புக்கான அல்பங்களில், சாதாரண அல்பம், சுழற்சி அல்பம் அல்லது சிறிய சட்டைப் பை அளவு அல்பம் (Pocket type Album) என்று சில வகைகளிலுள்ளன.

இந்த அல்பங்களில் ஒரு தபால் தலையில் இருந்து இன்னொரு தபால் தலைக்கான இடம் வேறுபட்ட அளவைக் கொண்டதாக இருக்கும். அதே போன்று தபால் தலைகளிலும் அவற்றை ஒன்றில் இருந்து ஒன்றை வேறுபடுத்தும் தலை வேறுபட்ட அளவுடையதாக இருக்கும். அதனால் தபால் தலை பாதுகாக்கப்படும், அல்பத்தில் 2 சென்றீமீற்றர் அளவு இடம் ஒதுக்கப்படுவது அல்லது கண்காணித்தல் போதுமானதாகும்.

## தபால் தலைகளின் தகவல்பட்டியல்

தபால் தலை தகவல் பட்டியல் என்பது முத்திரைகள் பற்றிய முழுமையான தகவல் அடங்கிய கைந்நூல் ஆகும். உலகின் மிகவும் பிரபல்யம் பெற்ற முத்திரைத் தகவல் களஞ்சியமாக 'ஸ்டென்லி கிபொன்ஸ் கட்லொக்' (Stanley Gibbons Catalogue) உள்ளது. இதன் இரண்டாம் அத்தியாயத்தில் இலங்கை என்ற தலைப்பின் கீழ் இலங்கையின் முத்திரைகள் பற்றிய தகவல் உள்ளடக்கபட்டிருக்கின்றது.

## அரிதான தபால் தலைகள்

தபால் தலைகள் சேகரிப்பவர்களுக்கு அவர்களது அல்பத்தில் இருந்து அதிர்ஷ்டத்தைக் கொண்டு வரும் சந்தர்ப்பங்கள் உள்ளன. அரிதான தபால் தலைகள் இருந்தால் அவ்வாறான வாய்ப்புக்கள் கிடைப்பதுண்டு. தபால் முத்திரை யொன்று அரிதாவற்குப் பல காரணங்கள் உண்டு.

- முத்திரையின் முக்கியத்துவம்.
- தற்போது கிடைப்பதற்கு அரிதாக இருத்தல்.
- முத்திரை அச்சிடும் போது ஏற்படும் குறைபாடுகள் அல்லது தவறுகள்.

உலகில் மதிப்புள்ள தபால் தலைகளானது பிரித்தானிய கஜானாவில் எல்.வோகான் என்ற சிறுவனால் தேடிக் கண்டு பிடிக்கப்பட்டதாகும். 1856 ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிரித்தானியாவின் காலனித்துவ பகுதியாக இருந்தபோது அச்சிடப்பட்ட 1 சதம் மதிப்புள்ள தபால் முத்திரையே இவ்வாறு மிகப் பெறுமதி வாய்ந்த முத்திரையாகியிருக்கின்றது. இந்த முத்திரை, கப்பல் ஒன்றின் படத்தைக் கொண்டதாக, வித்தியாசமான வடிவத்தைக் கொண்டதாகும். 1970 ஆம் ஆண்டு இந்த முத்திரை அமெரிக்க ஏலத்தில் 15 இலட்சம் ரூபாவுக்கு விலை போனதோடு அதனை "ஆர்விக் வின்" என்பவர் கொள்வனவு செய்திருந்தார். ஆனால் இன்று இந்த முத்திரை விலை மதிப்பற்ற பொக்கிசமாயிருப்பதாக கிபன்ஸ் கைந்நூல் தெரிவிக்கின்றது.

அதேபோன்று 1880 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 16 சதம் கொண்ட மற்றொரு முத்திரை இங்கிலாந்தின் "பொத்ஹாம்" ஏலத்தில் 50000 ஸ்ரேலிங் பவுண் (90 இலட்சம் ரூபா) அளவில் விலை போனதும் உண்டு. இந்த முத்திரை இவ்வளவு முக்கியத்துவம் பெறக் காரணம் இதன் உண்மையான விலையான 10 சதத்திற்குப் பதிலாக அதன் விலை 16 சதமாக விலை மாற்றம் செய்து, மீண்டும் அச்சிட்ட போது 10:10 என்று சதம் என்ற குறியீடு அச்சாகியிருந்ததாகும். அந்த அச்சுப்பிழை முத்திரையின் மதிப்பை உயர்த்திவிட்டது.

## மிக நீளமான தபால் தலை

1931 ஆம் ஆண்டில் சீனாவில் வெளியிடப்பட்டது. இதன் நீளம் 9 அங்குலமாகவும் அகலம் $3^{1/2}$ அங்குலமாகவும் இருந்ததாகும்.

## மிகச்சிறிய முத்திரை

இது கொலம்பியாவில் புழக்கத்தில் இருந்த 0.37 அங்குல நீளமும் 0.31 அங்குல அகலமும் கொண்ட முத்திரையாகும். இவ்வாறான விலை மதிப்பற்ற அரிதான முத்திரைகள் லண்டன் தேசிய தபால் அரும்பொருட் காட்சிச்சாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தபால் அரும்பொருட்காட்சிச்சாலையில் உலகின் ஏனைய நாடுகளைச் சேர்ந்த சுமார் 25000 முத்திரைகள் பாதுகாக்கப்படுகின்றன.

உலக வரலாற்றில் முதலாவதாகத் தபால் தலை சேகரித்தவர் என்ற பெருமையைப் பிரித்தானியாவைச் சேர்ந்த பெண் ஒருவர் பெறுகின்றார். அவர் தனது துயிலும் படுக்கை அறையை அலங்கரிப்பதற்காக முத்திரைகளைச் சேகரிக்கலானார்.

1841 இல் இவர் இந்தப் பொழுதுபோக்கை மேற்கொண்டார். உலகில் ஆகக் கூடுதலான தபால் தலைகளைச் சேகரித்தவர் என்ற பெருமையை இத்தாலியைச் சேர்ந்த பெண் ஒருவர் பெறுகின்றார். அவர் 1861 இல் முத்திரை சேகரிக்கும் பழக்கத்தை ஆரம்பித்து இறக்குப் போது 1000 பக்கங்களைக் கொண்ட முத்திரை அல்பம் 800 ஐ வைத்திருந்ததாகக் கூறப்படுகின்றது.

## முத்திரை தொடர்பான அமைப்புக்கள்

இலங்கையில் முத்திரைகளை அச்சிடுவது, வெளியிடல், விநியோகித்தல் போன்ற பணிகளைத் தபால் திணைக்களம் மேற்கொள்கின்றது. கொழும்பில் அமைந்திருக்கின்ற இந்தத் திணைக்களம் முத்திரை கொடுக்கல் வாங்கல் அங்கத்தவர்களுக்கு அதற்கான கணக்கை ஆரம்பித்துக் கொடுத்திருக்கின்றது.

முத்திரை சேகரிப்பின் முக்கியத்துவத்தை அறிந்த சர்வதேசத் தபால் யூனியன் 1994 இல் அது பற்றிய ஆய்வை மேற்கொள்ளக் குழுவொன்றை நியமித்தது. 1997 இல் இந்தக் குழு தபால் சேவையுடன் இணைந்ததாக உலக அமைப்புக்களை ஏற்படுத்தியது.

முத்திரை தொடர்பான விடயங்களுக்கான சர்வதேச அமைப்பு, சர்வதேச முத்திரை பெடரேசன், சர்வதேச முத்திரை விற்பனையாளர் சங்கம், தபால் விபரக்கொத்து முத்திரை அல்பம் மற்றும் முத்திரை வெளியீட்டாளர்களின் சங்கம், முத்திரை தொடர்பான ஊடகவியலாளர்களின் சங்கம் என்ற அடிப்படையில் இந்த அமைப்புக்கள் இயங்குகின்றன.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விஜய்

# வால் நட்சத்திரத்தில் பனிக்கட்டிப் படிவங்கள்





**வா**ல் நட்சரத்திரத்தில் பனிக்கட்டிப் படிவங்கள் இருப்பதாக நாஸா விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

'டீப் இம்பெக்டர்' என்ற செயற்கைக் கோளினை வானில் செலுத்தி, கடந்த ஜுலை மாதம் 'டெம்பிள்—1' என்ற வால் நட்சத்திரத்தின் மீது மோத வைத்த நாஸா விஞ்ஞானிகள், அப்போது வால் நட்சத்திரத்திலிருந்து வெளியான தூசிகளைப் படம் பிடித்து அவற்றிலிருந்து மேற்கொண்ட ஆராய்ச்சியின் முடிவாகவே இதனைத் தெரிவித்துள்ளனர்.

'வால் நட்சத்திரத்தில் பனிப் படிவங்கள் இருக்கலாம் என்பதை நாம் முன்பே எதிர்பார்த்திருந்தோம்' என்று கூறும் நாஸா விஞ்ஞானிகள், தற்போது அது உறுதியாகி விட்டிருப்பது குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இதன்படி, வால் நட்சத்திரத்தின் மேற்பரப்பில் மூன்று அடுக்குகளாகப் பனிக்கட்டி படிந்திருக்கிறது என்பதை அவர்கள் உறுதி செய்துள்ளனர்.

மேலும், வால் நட்சத்திரத்தில் பனிக்கட்டி இருப்பதால், அதன் உட்பகுதியில் உறைந்த நிலையில் தண்ணீர் இருப்பதற்கும் வாய்ப்புள்ளதாக அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்கள்.

அமெரிக்காவிலுள்ள மேரிலன்ட் பல்கலைக்கழகத்தின் ஆய்வுத் திட்டத் தலைமை ஆராய்ச்சியாளரான 'மைக்கேல் ஹெரின்' என்பவர், நாஸாவின் இவ்வாராய்ச்சி குறித்து, தான் முழுமையான நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் அதற்குக் காரணம், வால் நட்சத்திரத்தின் உட்பகுதியிலிருந்து தண்ணீர் ஆவியாகி வெளியேறுகிறது என்பதை நன்றாக அவதானிக்க முடிகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த ஆராய்ச்சியின் மூலம் வால் வெள்ளி பற்றிய மேலும் பல்வேறு முக்கிய தகவல்களைப் பெற்றிருக்கிறோம் என்கின்றனர் நாஸா விஞ்ஞானிகள்.

# வால் நட்சத்திரத்தின் தோற்றம்



**சு**மார் 460 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவானதாகக் கருதப்படுகின்ற சூரியன், பூமி மற்றும் சூரியக் குடும்பத்தில் உள்ள கிரகங்கள் எல்லாமே வான்வெளியில் உள்ள வாயுக்கள், மேகங்கள் மற்றும் தூசிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து தான் உருவாகியிருக்கும் என்று கருதுகின்றனர் விஞ்ஞானிகள். இவையெல்லாம் உருவாகிய பின்னர் மீதம் எஞ்சியுள்ள வாயுக்களும், தூசிகளும் சேர்ந்து உருவாகியவையே வால் நட்சத்திரங்களாக இருக்கும் என்று கருதும் நாஸா விஞ்ஞானிகள், அது குறித்த ஆராய்ச்சிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

கிரகங்களின் எச்சங்களாக வால்வெள்ளிகள் கொள்ளப்பட்டாலும், சூரியன், பூமி போன்ற கிரகங்கள் உருவான அதே காலப்பகுதியிலேயே வால் வெள்ளிகளும் தோன்றியிருக்க வேண்டும் என்பதும் அவர்களுடைய கணிப்புத்தான்.

ஆக, வால் நட்சத்திரங்களுக்கும் வயது 460 கோடி ஆண்டுகளுக்கு மேல் தான்! ஆனால் அவை தொடர்பான ஆராய்ச்சிகளைத் தான் மிகவும் தாமதமாகத் தொடங்கி விட்டார்கள்.

# பழுதுபார்ப்புப் பணி!





**ச**ர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ள இரண்டு வீரர்கள், விண்வெளியில் நடந்து கொண்டே நிலையத்தின் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். இம்மாபெரும் சாதனையானது 6 மணித்தியாலங்களாகத் தொடர்ந்து நடைபெற்றுள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா அகிய இரு பெரும் நாடுகளும் இணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளி நிலையத்தினை அமைத்து வருகின்றன.

அந்நிலையத்தின் உருவாக்கற் பணிகளை இவ்விரு நாடுகளின் விஞ்ஞான தொழில்நுட்பவியலாளர்கள் அங்கு தங்கியிருந்து மேற்கொண்டு வருகின்றனர். இதனால் மேலும் பல விண்வெளி வீரர்களும் அடிக்கடி அங்கு சென்று வந்த வண்ணமே இருக்கின்றனர். சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியிருந்தவர்களில், அமெரிக்காவைச் சேர்ந்த 'பில்மெக் ஆர்தர்' (சர்வதேச விண்வெளி நிலைய அதிகாரி), ரஷ்யாவைச் சேர்ந்த பொறியியலாளர் 'வாலெரி தோகரேவ்' ஆகியோரே நிலையத்திலிருந்து வெளியே வந்து விண்ணில் நடந்தபடி பழுது பார்ப்புப் பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். மேலும் பழையதோர் விண்கலத்திலுள்ள ரேடியோ செயற்கைக் கோளினையும் இவ்விருவருமாக இயக்கி வைத்தனர் என்று நாஸா நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# விண்வெளித் தகவல்கள்

லதா

## அக்கினி-3 தயார்!






இந்தியாவின் அதி நவீன ஏவுகணையொன்று விண்ணில் செலுத்துவதற்காகத் தயார் நிலையில் உள்ளதாக, இந்தியப் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அக்னி—3 என்று பெயர் சூட்டப்பட்டுள்ள இந்த ஏவுகணை 3,000 கி.மீ தூரத்துக்கு மேல் பாய்ந்து செல்லக் கூடியது. இதில் ஒரு தொன் எடையுள்ள அணு ஆயுதத் தளபாடங்களை வைத்து அனுப்ப முடியுமாம்.


**'விஜய்' அடுத்த இதழ் பெப்ரவரி 22 ஆம் திகதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது நாட்டின் மலை உச்சிகள் இப்போதும் வளர்ந்து வருகின்றன







இற்றைக்கு 180 மில்லியன் வருடங்களுக்கு முன் உருவாகிய இலங்கையின் பௌதீகத் தோற்றத்தில் இன்று வரைக்கும் மலைகளின் உருவாக்கமானது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. இது தொடர்பாக ஆராய்ச்சி செய்த பூகர்ப்பவியலாளர்கள் இலங்கையில் இத்தகைய பதினான்கு உயர்ந்த மலைகளை இனங் கண்டுள்ளனர்.

நாம் எந்நேரம் இவ்வுலகில் பிறந்தோமோ அந்நேரம் முதல் இயற்கைச் சூழலுடன் ஒன்றித்து விட்டோம். ஒரு குழந்தை தன் தாயுடன் எவ்விதம் இணைந்து வாழ்கின்றதோ அது போல் நாமும் சூழலுடன் பின்னிப் பிணைக்கப்படுகின்றோம். அடர்ந்த காடுகள், மலைகள், பாய்ந்து செல்லும் நதிகள், அழகான நீர்வீழ்ச்சிகள், காட்டு விலங்குகள் அத்தனையும் இயற்கையன்னை நமக்கு அள்ளிக் கொடுத்த அருங் கொடைகள். இவையனைத்தும் நமக்குப் பேரானந்தத்தைத் தருகின்றன. அத்துடன் இவையாவும் நம்மைச் சிந்திக்கவும் வைக்கின்றன.

நிலத்திலிருந்து மேலெழுந்து கம்பீரத் தோற்றத்துடன் பார்ப்பவர்களைப் பிரமிக்க வைக்கும் அளவில் வளர்ந்திருக்கும் உயர்ந்த மலைகள் இலங்கைக்கு, இயற்கையளித்த கொடைகளாகும். இலங்கையில் மலைத்தொடர்கள் மட்டுமன்றித் தனிக் குன்றுகள் பலவும் உண்டு. இது தொடர்பாக எம் நாட்டுப் புவியியலாளர்கள் கூடிய அக்கறை காட்டி வருகின்றனர்.

இற்றைக்கு 180 மில்லியன் வருடங்களுக்கு முன்பு அந்தாட்டிக்கா, இலங்கை, இந்தியா என்பவை ஒன்றாக ஒரே நிலத்தால் இணைக்கப்பட்டிருந்தன. காலப்போக்கில் புவியின் மேற்பரப்பில் ஏற்பட்ட புவித் தோற்றப்பாடுகள் காரணமாக அந்தாட்டிக்காவிலிருந்து இலங்கை என்றும் இந்தியா என்றும் நிலப்பரப்புகள் தனித்தனியாகப் பிளவு பட்டன. புவியின் மேற்பரப்பில் ஏற்பட்ட தள்ளுவிசை காரணமாக இலங்கையின் மத்திய பகுதியில் மலைகள் உருவாகின. இவ்விதமான புவியியற் காரணங்களை வைத்து நோக்கும் போது இற்றைக்கு 180 மில்லியன் வருடங்களிற்கு முன்பே இலங்கையில் மலைகள் உருவாகத் தொடங்கின என்ற முடிவிற்கு வரலாம்.

## பேதுருதலாகல மலை

இதுவே இலங்கையின் மிகவுயர்ந்த மலையாகும். இது கடல் மட்டத்திலிருந்து 2524 மீற்றர் உயரமானது. கடல் மட்டத்திலிருந்து 1800 மீற்றர் உயரத்திலுள்ள நுவரெலியா நகரின் அண்மையிலிருந்து இது ஆரம்பமாகின்றது. நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள இம்மலைக்குச் செல்ல வேண்டுமாயின் நுவரெலியா நகரினூடாகவே செல்ல வேண்டும். மகாவலி கங்கையின் கிளை நதியான பெலிஹுல் ஓயா மலை இம்மலைத் தொடரின் அண்மையிலிருந்தே ஆரம்பமாகின்றது. இம்மலைத் தொடரின் உச்சியில் அமைக்கப்பட்டுள்ள தொலைக்காட்சி ஒளிபரப்புக் கோபுரம் காரணமாகப் பாதுகாப்பான வலயமாக இது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

## தொட்டபொல மலை

தொட்டபொல மலை இலங்கை அரசன் இராவணனின் 'அரண்' எனக் குறிப்பிடப்படுகின்றது. இதன் காரணமாகவே தொட்டபொல நிலையம் (சிங்களத்தில்) என்ற பெயர் வந்ததாக இங்குள்ள மக்கள் கருதுகின்றனர். 2359 மீ உயரமுடைய இம்மலை நுவரெலியா மாவட்டத்தில் ஹோட்டன் சமவெளியில் அமைந்துள்ளது. பெலிஹுல் ஓயாவிலிருந்து உமா ஓயாவிற்குச் செல்லும் கிளை நதியொன்று இம்மலையிலிருந்து உற்பத்தியாகின்றது. இம்மலைப்பகுதியில் உயர் நில ஈரவலயக் காடுகள்க காணப்படுகின்றன.

## கிறேட் வெஸ்டன் மலை

நுவரெலியா மாவட்டத்தில் கிகிலியான மலையின் மேற்குப் பகுதியில் கிறேட் வெஸ்டன்



மலை அமைந்துள்ளது. இது 2210 மீ உயரமானது. இம் மலையை அண்மிக்க வேண்டுமாயின் கொழும்பு-பதுளை புகையிரத நிலையம் அமைந்துள்ள பகுதிக் கூடாகவே வரமுடியும். இம்மலையை அண்டிய பகுதிகளில் மீள் நடுகை செய்யப்பட்ட பைன் மரக் காடுகளையும் தேயிலைத் தோட்டங்களையும் காணலாம். மகாவலி கங்கை நதியின் கிளை நதியான நானுஓயா நதி இங்கிருந்தே உற்பத்தியாகின்றது.

## கிரிகால பொத்த

இலங்கையிலுள்ள உயரம் கூடிய மலைகளில் இரண்டாம் இடத்தைப் பெறுவது கிரிகல் பொத்த ஆகும். இது கடல் மட்டத்திலிருந்து 2395 மீ உயரத்தில் உள்ளது. கடல் மட்டத்திலிருந்து 2000 மீற்றர் உயரத்திலுள்ள ஹோட்டன் சமவெளிக்கூடாகவே செல்ல வேண்டும். வளவ கங்கையில் விழும் மெலிஹுன ஓயாவும், மகாவலி கங்கையுடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையும் ஆக்ரா ஓயாவும் மற்றும் கெஹேல் கமு ஓயாவும் இம் மலையிலிருந்தே ஆரம்பமாகின்றன. இம்மலையின் ஒரு பகுதியில் சூரிய ஒளி பட்டுப் பால் போல் தெறிப்பதன் காரணமாகப் பாறையில் ஏற்படும் ஒரு மினுமினுப்பினால் இம் மலைக்குக் கிரிகல் பொத்த எனும் பெயர் வந்ததாகக் கிராம மக்கள் கூறுகின்றனர். இம்மலைப் பகுதிகளில் உயர்நில ஈரவலயக் காடுகளைக் காணலாம்.

## கொன்மொல்லிய மலை

ஒரு காளை மாட்டின் திமிலை ஒத்த வடிவத்தில் இம் மலை காணப்படுவதன் காரணமாகக் கொன்மொல்லிய (திமில்) எனும் பெயர் வந்ததாகப் பலர் கருதுகின்றனர். இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள இம்மலையை நாம் பலாங்கொடைப் பிரதேசத்திலேயே காணலாம். ''உலகத்தின் முடிவு'' என்றழைக்கப்படும் பிரதேசத்தைப் பார்க்கச் செல்லும் போது அதற்குச் சற்று கீழ்ப் புறமாக இம் மலையைக் காணலாம். வளவ கங்கையுடன் இணையும் கிளை நதியான கிரிகெட்டி ஓயாவின் கிளை நதியொன்று இம்மலையுச்சியிலிருந்தே ஆரம்பமாகின்றது.

## கிகிலியமான மலை

பேதுருதலாகல மலையின் மேற்குப் புறமாக உள்ள இம்மலை 2240 மீ உயரமானது. நுவரெலியா-கண்டி பிரதான பாதையின் அருகில் இம்மலை உள்ளது. மகாவலி கங்கையின் கிளை நதியான றம்பொடை ஓயா இம்மலையிலிருந்தே ஆரம்பமாகின்றது. இம் மலையை அண்டிய பகுதிகளில் ஈரவலயக் காடுகளைக் காணலாம்.



## மகாகுடாகல

நுவரெலியா, கந்தப்பொல நகரின் அண்மையில் இம்மலை உள்ளது. இது 2100 மீற்றர் உயரமுடையது. மகாவலி கங்கையுடன் இணையும் கிளை நதியொன்று இம்மலையிலிருந்தே உற்பத்தியாகின்றது.



## குடஹகல

இலங்கையிலுள்ள மிக உயரமான மலைகளில் நான்காம் இடத்தை இம்மலை பிடித்துள்ளது. இது 2320 மீற்றர் உயரமுடையது. மலைகளைக் கண்டு களிக்கச் செல்ல விரும்புபவர்களை மீககதிவுல என்ற மலைப் பிரதேசத்தில் இருந்து பார்வையிடலாம்.

## சிவனொளிபாத மலை

புத்த பெருமான் இலங்கை வந்த போது இம்மலையுச்சிக்கு வருகை தந்தமையால் 'ஸ்ரீபாத'' என்ற பெயர் ஏற்பட்டதாகப் பௌத்தர்கள் கருதுகின்றனர். மறுபுறம் இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துக்களும் இம்மலை தொடர்பாகப் பல கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். இதனால் இம்மலையைக் கிறிஸ்தவர்கள் ஆதாமின் மலை என்றும் இந்துக்கள் சிவனொளிபாத மலை என்றும் அழைக்கின்றனர். இது 2243 மீற்றர் உயரமுடையது. சிவனொளிபாத மலை தொடர்ச்சியாக மலைகளைக் கொண்டது. இதில் கெடனிதுள்ள மலை, பேன சமனல, குணுதிய பர்வதய, என்றழைக்கப்படும் உயரமான மலை உச்சிகள் காணப்படுகின்றன. இம்மலைத் தொடர் இரத்தினபுரி மற்றும் நுவரெலியா மாவட்டத்திற்கு உரித்தானதாக உள்ளது. இம்மலையைத் தரிசிக்க விரும்புவோர் நுவரெலியா மாவட்டத்தினூடாகவோ அல்லது இரத்தினபுரி மாவட்டத்தினூடாகவோ செல்ல முடியும். சிவனொளிபாத மலை ஹட்டன் மேட்டு நிலத்தின் தென் எல்லையில் அமைந்துள்ளது. களு கங்கை மற்றும் களனி கங்கை என்பன சிவனொளி பாத மலையினருகில் உற்பத்தியாகும் நதிகளாகும்.

## இலங்கையில் உள்ள மலைகளின் உயரங்கள்

| மலை | உயரம் (மீற்றர்) |
|---|---|
| பேதுருதலாகல மலை | 2524 |
| கிரிகாலபொத்த மலை | 2395 |
| தொட்டபொல மலை | 2357 |
| குடஹகல மலை | 2320 |
| சிவனொளிபாத மலை | 2243 |
| கிரேட் வெஸ்டன் மலை | 2216 |
| ஹக்கல | 2170 |
| கொனிகல் ஹில் | 2166 |
| வன திரி ஹில் | 2100 |
| மஹ குடாகல | 2100 |
| வோட்டர் போல் பொயின்ட் | 2074 |
| நமுனகுல | 2036 |
| கொன் மொல்லிய மலை | 2034 |

(மூலம் : நில அளவை திணைக்களத்தால் வெளியிடப்பட்ட நஷனல் அட்லஸ் தேசப்படம்)

## வன் திரி ஹில்

பேதுருதலாகல மலைக்குத் தெற்காகவும் தெற்கே நுவரெலியா நகருக்கு மேற்காகவும் மேற்கில் அமைந்துள்ள இம்மலை 2100 மீற்றர் உயரமானது. இதிலிருந்து நானுஓயா நதியின் கிளை நதி உற்பத்தியாகின்றது.

## வோட்டர் போல் பொயின்ட்

நானுஓயாவின் அருகில் அமைந்துள்ள இம் மலை 2074 மீற்றர் உயரமானது. மகாவலி கங்கையுடன் இணையும் சில கிளை நதிகள் இம் மலைப்பிரதேசத்தில் ஆரம்பமாகின்றன.


## ஹக்கல மலை


யானையின் தந்தத்தை ஒத்த வடிவில் இம்மலை காணப்படுவதன் காரணமாகக் இது ஹக்கல என்று அழைக்கப்பட்டது. பின்னர் ஹக்கல என்று குறிப்பிடுகின்றது. நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள இம்மலை 2170 மீற்றர் உயரமானது. ஹக்கல மலையைப் பார்க்க விரும்பின் நுவரெலியா மாவட்டத்தினூடாகவே செல்ல வேண்டும்.

உமா ஓயாவை வளமூட்டும் கிளை நதி இம்மலையிலிருந்தே உற்பத்தியாகின்றது. இம் மலையடிவாரத்திலே ஹக்கல தாவரவியல் பூங்கா உள்ளது. இலங்கையில் பாதுகாக்கப்பட வேண்டிய மற்றும் மிகவும் இரசிக்கக்கூடிய அழகான வலயமாக இப் பிரதேசத்தைக் குறிப்பிடலாம்.

## நமுனகுல

இலங்கையின் மத்திய மலைநாட்டில் கிழக்கு மற்றும் ஊவா பிரதேசத்தின் கிழக்கு எல்லையில் இம் மலை அமைந்துள்ளது. பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள அம் மலை 2030 மீற்றர் உயரமானது. பதுளை பசறை போக்குவரத்து பாதையில் சென்றால் இம் மலையைக் கண்டு களிக்கலாம். மகாவலி கங்கையின் கிளை நதியாக பதுளுஓயா இதிலிருந்தே ஆரம்பமாகின்றது. இடைப்பட்ட பிரதேசங்களில் அடர்ந்த காடுகள் காணப்படுகின்றன.






## கொனிகல் ஹில்

ஹக்கல மலைத்தொடரில் அமைந்துள்ள இம் மலை 2166 மீற்றர் உயரமானது. இம் மலை பிரசித்தி பெற்ற மலையாக இலவ்லாதிருப்பினும் இலங்கையிலுள்ள உயரமான மலைகளுள் இதுவும் ஒன்றாக உள்ளது. ஹக்கல மலைத் தொடரில் இம் மலை அமைந்திருப்பதன் காரணமாக அதிக பிரபல்யமான மலையாக தெரிவதில்லை.

எஸ்.கிறேஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எறும்பின் விந்தையான வாழ்க்கை

உயிரினங்களில் மிகச்சிறிய உயிரினமே எறும்பாகும். இது கடுகளவு சிறிதிலிருந்து பென்னம் பெரிய கட்டெறும்பு வரை இருப்பதைக் காணுகிறோம். கடுகு சிறிதாயினும் காரத்தில் குறைந்தது இல்லை! அதேபோல், எறும்பு சிறிதாயினும் பென்னம் பெரிய யானையையும் கொல்ல வல்லதாம்!

அத்துணை பேராற்றல் கொண்ட எறும்புகள், பாலை வனத்து மணற் பரப்பிலும், கடற்கரைகளிலும், மலைப் பிரதேசத்திலும், மலைச் சரிவுகளிலும், கொடுங் காடுகளிலும், சதுப்பு நிலங்களிலும் வாழும். ஆனால், அவை மலைக் குன்றுகள்—மலைச் சிகரங்கள் போன்றவற்றிலும், பனிப் படலங்களிலும் வாழ முடியாது.

எறும்புகளில், பல்லாயிரம் இனங்களும், இனங்களுக்கேற்ப உருவ அமைப்புங் கொண்டிருக்கின்றன. அவை எப்பொழுதுங் கூடி வாழும் ஓர் இனமாக, அதுவுங் கூட்டங் கூட்டமாக





## அறிவியற் கலசம்

பருக்கை : 47

அன்புச் செல்வங்களே!


'கடுகு சிறிதாயினும் காரத்தில் பெரிது' எனுமாப் போல் எறும்பு, யானையையும் கொல்ல வல்லதாம். அத்துணை வல்லமை உள்ள எறும்பின் வாழ்வு மிகவும் விநோதமானது. அதனை அறிவியல் நோக்கில் இங்கு சிறிது பார்ப்போம். வாசியுங்கள். வாசித்தவற்றை மற்றவர்களுடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

நன்றி.

வாழும் மிகவும் ஒற்றுமையான உயிரினமாக, வாழும் சின்னஞ் சிறிய உயிரினமாக இருக்கிறது.

எறும்புகளில் முக்கியமாக மூன்று பிரிவுகள் உண்டு. இனம் பெருக்கும் இராணி எறும்பு; வேலை செய்யும் வேலையாட்கள்; ஒன்றுமே செய்யாத சோம்பேறி எறும்புகள் என்பனவே அம் மூவகைப் பிரிவுகளுமாம். இவற்றுள், இனம் பெருக்கும் இராணி மட்டுமே பெண் எறும்பாக இருக்க ஏனையவை யாவும் ஆண் எறும்புகளாக ஒரு கூட்டத்தில் (Colony) இருக்கின்றன. இந்த ஆண் எறும்புகளில், சில ஆண் எறும்புகள் இனப் பெருக்கச் சேர்க்கையின் பின் இறந்து விடுகின்றன.

எறும்புகள் வெவ்வேறு பருமனில் இருந்தாலும், அவை யாவும் பார்வைக்கு ஒரே மாதிரியாகவே தோற்றமளிக்கும். ஒவ்வொரு எறும்புக்கும் உள்ள உணர் கொம்புகள் தலையில் நீட்டிக் கொண்டிருக்கும். இவ்வுணர் கொம்புகள் தமக்கு முன்னால் இருக்கும் பொருள்களை இனங்கண்டு கொள்ளவும், தம் கூட்டத்தாருக்குத் தாம் பார்த்ததை உணர்த்தவும் உதவும். இச் செயற்பாடுகளுடன் தாம்காணும் பொருள்களின் வாசனையை மணந்து அவற்றின் தன்மையை உணர்ந்து கொள்ளவும் உதவும்.



ஓர் பழத்தின் விதையினைத் தமது இருப்பிடத்துக்கு எடுத்துச் செல்வதற்காகக் கட்டெறும்புகளும் (கறுப்பு நிறத்திலான பெரிய எறும்பு), முசுறுகளும் (பழுப்பு நிறத்திலான பெரிய எறும்புகள்) சண்டை போட்டுக்கொண்டே முயற்சி செய்கின்றதை இப்படத்தில் காண்கிறீர்கள்.

A - கட்டெறும்பொன்று முசுறு எறும்பைத் தாக்குகிறது.
B - முசுறுகளின் முட்டைகளைக் கட்டெறும்புகள் தம்மிடத்திற்குத் திருடிச் செல்கின்றன.
C - தொழில் போட்டியில் கட்டெறும்பைத் தொடர்ந்து செல்கிறது முசுறு.


எறும்புகளுக்கு வாசனை உணர்வுக்கான நாசி உறுப்பு இல்லையாயினும், அவற்றின் உடலில் உள்ள உணர்வுக் கோலங்கள் மூலம் உணர்ந்து கொள்ளும். இது தவிர, மற்றுமொரு சிறப்புச் செயற்பாட்டுக்கும் குறிப்பிட்ட உணர்கொம்புகள் உதவுகின்றன. அதாவது, உணர்கொம்பு மூலம் தம் இருப்பிடம் பற்றி ஏனைய எறும்புகளுக்கு உணர்த்தவும், மற்றைய எறும்புகளின் வித்தியாசங்களைக் கண்டு



கொள்ளவும் துணை புரிகிறது.

பெரும்பாலான இராணி எறும்புகளுக்குப் பறக்கக் கூடிய செட்டைகள் இருக்கின்றன. ஆனால் மற்றைய எறும்புகளுக்கும் வேலையாள் எறும்புகளுக்கும் செட்டைகள் கிடையாது. குறிப்பிட்டதொரு காலத்தில் இராணி எறும்பு பறக்க உதவும் செட்டைகளை உதிர்த்துவிடும். இவ்வாறு இராணி எறும்பின் நடவடிக்கை, எறும்புக் கூட்டத்தில் ஒரு சிறப்பான காட்சியாகவே விளங்கும்.

பின்னர் இராணி எறும்பு, தான் அதுவரை கூடியிருந்த கூட்டத்தை விட்டகன்று தனியொரு கூட்டத்தைப் புதிதாக உருவாக்கப் புதிய குடும்பத்தை உருவாக்கும். அதனோடு, ஆண் வேலையாள் எறும்புகளும் சேர்ந்து, வேண்டிய செயற்பாடுகளைச் செய்து புதிய கூட்டத்தைச் செம்மைப்படுத்தும். அங்கு இராணி எறும்பு முட்டைகளை இடவும், குஞ்சுகளை உற்பத்தியாக்கி, அவை உருவாகி விருத்தியடையவும் வேலையாள் எறும்புகள் உதவும். இந்தப் பிறப்பு உற்பத்தியாகுங் காலத்தில் முட்டைகள் பாதுகாப்புடன் பேணப்பட்டு, அடைகாக்கப்பட்ட பின்னர் கால்களற்ற எறும்புக் குஞ்சுகள் வெளிவரும். இக்குஞ்சுகளின் உடலைச் சுற்றி, இராணி எறும்பு வலை போன்ற கூட்டைப் பின்னும். அப்பொழுது, கூட்டுக்குள் இருக்கும் கூட்டுப்புழு (Cocoon) எனப்படும் முட்டைக் குஞ்சுகள், காலக்கிரமத்தில் வளர்ந்து, தாய் எறும்பின் உதவியால் கூட்டை உடைத்துக் கொண்டு வெளிவரும். இதனையடுத்து அங்குள்ள வேலையாள் எறும்புகள் புதிய எறும்புக் குஞ்சுகளுக்கு வேண்டிய உணவு, பாதுகாப்பு என்பனவற்றை மிகவும் அக்கறையுடனும் ஆதரவாகவும் கவனித்துக் கொடுக்கும். அந்த வகையில், வேலையாட்களின் பணி; எறும்பின் பிறப்புக்கும் அவற்றுக்கான பராமரிப்புக்குமான பணிவிடைகள் மூலம் முக்கியமானதாகும். மொத்தத்தில் எறும்புகளின் வாழ்க்கை முறை விந்தையிலும் விந்தையே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடித்தீ ஒரு வரலாற்றுப்பதிவு




நாடறிந்த எழுத்தாளர் ஓ.கே.குணநாதன் அவர்கள் எழுதிய "ஆடித்தீ" நாவல் ஈழத்து மண்ணைக் களமாகக் கொண்டது மட்டுமன்றி சமகால வாழ்க்கைப் பிரச்சினைகளையும் நிகழ்ச்சிகளையும் பதிவு செய்துள்ளது.

சிறுவர் இலக்கியத்தைச் சிறப்புத் துறையாகக் கொண்ட எம்.ஏ.பட்டதாரியான இவர். பல நாவல்களையும், ஆய்வு நூல்களையும் எமக்குத் தந்துள்ளார். "ஊமை நெஞ்சின் சொந்தம்," "ஒருதுளி," "ஆடித் தீ" என்னும் படைப்புக்கள் இவரின் நாவல் இலக்கியப் படைப்பாற்றலுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். சிறுவர் இலக்கியத்திற்காகப் பலமுறை வடக்குக் கிழக்கு மாகாணச் சாகித்தியப் பரிசையும், தேசிய சாகித்திய விருதையும் சுவீகரித்துக் கொண்டவர். "ஒரு துளி" நாவல் இந்தியாவின் 'தேவியின் கண்மணி' என்ற சஞ்சிகைப் பரிசினைப் பெற்றது.

குணநாதன் அவர்கள் நூல் பிரசுரத்துறையிலும் அளப்பரிய சாதனைகளைப் புரிந்துள்ளார். இவரின் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் பிரசுரம் மூலம் இதுவரை 24 நூல்களைப் பிரசுரித்துள்ளார். "வவுனியாவும், இலக்கிய வளர்ச்சியும்" என்பது இவரது ஆய்வு நூலாகும். "ஆடித் தீ" என்னும் நாவல் இனக் கலவரத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மகேந்திரன், என்னும் எழுதுவினைஞரின் கதையாகும். மகேந்திரன் அவரது காதலி நித்தியா என்போரைச் சுற்றிக் கதை நகர்கிறது. இவர்களதும் துணைப் பாத்திரங்களான நிவேதா (மகேந்திரனின் தங்கை) அற்புதராஜன், அன்பழகன் (போராளிகள்) என்போரதும் உணர்வுகளும் செயல்களும் கதையின் அடிநாதமாகத் திகழ்கின்றன.

இந்த நாவல் வெறுமனே கதை கூறுவதுடன் நின்று விடவில்லை. கதையினூடாக ஈழத் தமிழர்களின் துன்பதுயரங்கள், உயிர் உடைமை இழப்புக்கள், தமிழ் இளைஞர்களின் விரக்தி நிலை, சாதியின் பெயரால் நிலவும் ஒடுக்கு முறைகள் முதலானவை சித்திரிக்கப்படுகின்றன. "ஆடித் தீ" ஈழ மண்ணின் விடுதலைப் பயணத்தில், கடந்த இரு தசாப்தங்களாக இடம் பெற்ற நிகழ்வுகளை ஆவணப்படுத்துகின்றது. வரலாறு இந்த நிகழ்வுகளைப் புறக்கணித்தாலும் இந்த நாவல் இவற்றை நேர்த்தியாகப் பதிவு செய்துள்ளது.

மாமாங்கப் பிள்ளையார் கோயிலில் தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் சுவாமி தூக்க முனைந்த போது உயர்சாதி வண்ணக்கர் காட்டிய எதிர்ப்பு; சாதியின் பெயரால் இடம் பெறும் ஒடுக்கு முறைக்கு ஒரு பதச் சோறாக அமைகிறது. பாத்திரப் படைப்பு கச்சிதமாக அமைந்துள்ளது. நித்தியா வெறுமனே காதலியாக மட்டுமன்றி அவனது கோழைத்தனத்தை அகற்றி விடுதலைப் பயணத்திற்குத் திசை திருப்பியவள்.

"நீங்க ஒரு மனுஷனா? கேவலம் சுயநலவாதி. உங்களை நீங்களே ஏமாற்றும் ஏமாற்றுக்காரன், நீங்கள் பாதிக்கப்பட்டதற்காகத் தற்கொலை செய்யத் துணிந்தீர்களே.. உங்களுக்கு வெட்கமாக இல்லை" என்று கூறி வீணாக உயிர் விடுவதன் அர்த்தமின்மையை வலியுறுத்தும் பெண்ணாகத் திகழ்கின்றாள். இந்தியாவில் பயிற்சி முடிந்து போர்க்கோலத்தில் திரும்பி வந்த மகேந்திரனைப் பார்த்துத் துப்பாக்கியைத் தூக்கி எறிந்து விட்டு எங்காவது ஓடிப் போகலாம் எனக் கூறுகிறாள்.

இனக் கலவரத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டுத் தங்கையை இழந்த மகேந்திரன் வர்க்க முரண்பாட்டால் நித்தியா மீது கொண்ட காதலுக்கு எதிர்ப்பு வந்தபோது விரக்தியடைந்து தற்கொலை செய்ய முனையும் கோழையாக மாறுகின்றான். காதலியினால் இடித்துரைக்கப்பட்டதும் விடுதலைப் போராட்டத்தில் குதிக்கிறான்.

இந்நூலை, 'எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்' வெளியிட்டுள்ளது. முகவரி : இல.64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு. தொ.பே : 065-2226658, 077-6041503. விலை ரூ.175/=.

# பிள்ளைகளுக்கான பாடல்கள்




எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 28வது வெளியீடாக வெளிவந்துள்ளது 'சின்னச்சிட்டுக்கள்'. நாடறிந்த இலக்கியவாதி அகளங்கனின் கைவண்ணத்தில் உருவான இந்நூலில் அம்மா, சிட்டுக்குருவி, ஊஞ்சல், நாய்க்குட்டி, கன்றுக்குட்டி, நட்சத்திரம், கிளிக்குஞ்சு, வெண்ணிலவே, பாடுவோம் ஆடுவோம், தோகை மயில், சுத்தம் சுகம், சின்னக்குயிலே, பாரதி, அணிற் பிள்ளையாரே, தேனீயாரே, பச்சைக்கிளி, ஆமை, பந்தடிப்போம், தாயுள்ளம், அன்னம், காகம், நல்ல வார்த்தை, நிலா, சின்னப் பறவைகள், மானுடம் நிலைக்கும், மனிதப் பண்பு, ஏமாற்று, சிரிக்க விடுங்கள், ஒற்றுமைப் பாட்டு, புள்ளிமான் ஆகிய தலைப்புக்களில் சிறு சிறு பாடல்கள் புனையப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

எழுத்தாளர் அகளங்கனுக்குப் புதிதாக அறிமுகம் தேவையில்லை. இவர் இதுவரை 30 நூல்கள் எழுதியுள்ளார். பண்டைய தமிழ் மணத்தையும், இன்றைய தமிழ் உணர்வையும், தனது எழுத்துக்களாலும், பேச்சுக்களாலும், வாழ்வியலாலும் மக்கள் மத்தியில் பரப்பி வருபவர்.

தமிழிலக்கியக் கட்டுரைகள், கவிதை, ஆய்வு, நாடகம், பிள்ளை இலக்கியம், அறநூல் உரைகள், இசைப்பாடல்கள், சிறுகதை எனப் பல்வேறு தளங்களில் இயங்குபவர் என்று குறிப்பிடுகின்றார்; நூலுக்கு அறிமுக உரை வழங்கியுள்ளார் கந்தையா ஸ்ரீ கணேசன். (விரிவுரையாளர், வவுனியா வளாகம்)

தனிப்பிரதி ஒன்றின் விலை ரூ 125/=. முகவரி : இல 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு. தொ.பே : 065-2226658, 0776041503.




# தணிகர் கவிதைகளின் தாற்பரியம்

தணிகாசலம் கவிதைகளின் உயிரோட்டத்தினை அவருடைய எழுத்துக்களினூடாகக் காண்பதே சரியான வழிமுறை ஆகும். 1975 தொடக்கம் மிக அண்மைக்காலம் வரையிலான காலப்பகுதியைத் தழுவி நிற்கும் இந்த ஆக்கங்களில் ஊடுருவி நிற்கும் பண்புகளிற் பிரதானமானவை பின்வருமாறு :-

காலப் பெயர்ச்சியினது ஓட்டங்களின் சுவடுகளைப் பதிவு செய்திருத்தல், மக்களின் குறிப்பாக உழைக்கும் மக்களின் நலன் பற்றிய ஊன்றிய அவதானிப்பு; உடனியற் சூழலின் இன்ப துன்பங்கள் மீதான அக்கறை; ஒடுக்கலுக்கும் சுரண்டலுக்கும் உள்ளாகி உழலும் மாந்தர்கள் யாவரும் ஒருங்கு திரளக்கூடியவர்கள், திரட்டப்பட வேண்டியவர்கள் என்னும் எண்ணத் துணிவு; மேலாதிக்க அடாத்துகளுக்கு எதிரான விழிப்பினைத் தூண்டும் தணியாத ஆவல்; மாறுபட்டும் வேறுபட்டும் தொடர்ந்தியங்கும் உலக வரலாறு பற்றிய தெரிந்துணர்வு என்பனவாகும்.

தொகுதியில் முதலாவதாய் இடம் பெறுவது, 'வெறும் பேனா வீரர்கள்' பற்றியதொரு விமர்சனம். 'உதிரிகளாய் நிற்கும் உங்கள் தனிமனிதத் திட்டுகளால் அல்லது வெட்டு குத்து என்ற வெறும் வாய்ச் சவடால்களால் விடுதலை கிட்டாது..... மக்களிடம் போங்கள்..... கண்ணோட்டம் தெளிவு வரும் அல்லது காலத்தை மாற்றுகின்ற கவிதைக்கும் ஊற்று வரும்' என்று பேசும் இந்த வாசகம், ஒரு வகையிலே கவிஞரின் கருத்தியற் பிரகடனமாகவும் அமைந்து விடுகிறது. 'சாதி, இன, மத, நிறத்தைச் சாட்டாக வைத்தொருவன் சக மனிதன் மீதேறி சவாரி விடுவதனைச், சாவரினும் நாம் ஏற்கோம்' என்று சத்தம் போடும் மனப்பான்மையையும் உணர்வு வலுவையும் ஊட்ட முந்துகிற பண்புதான், தணிகர் கவிதைகளின் தாற்பரியம்.

'உடையாரின் பொல்லு' என்ற பழந்தொடர் காட்டும் படிமத்தை விருத்தி செய்து இப்படியொரு புதிய கலைப்படைப்பைப் புனைந்து தருகிறார் தணிகர். 'மீட்பர்' கவிதையில் வருவனவற்றை விட வித்தியாசமான பிரபுக்குல மரபுக்கூறுகள் இங்கு படைப்பாக்கத் திரவியங்களாய் உதவுகின்றன.

இவை எல்லாவற்றையும் விட நாம் உற்றுக் கவனிக்க வேண்டியது- கண்கூடான தினசரிக் காட்சிப் படிமங்களை வைத்தே தாக்கவலுமிக்க கலைநயத்தை உருவாக்கிவிடும் அற்புதம். இந்நூலில் 20 ஆம் கவிதையாய் இடம் பெறும் 'எதிர்பார்ப்பு' என்பதில், இந்த அற்புதம் தோன்றுகிறது. குடாநாட்டில் அடிக்கடி தலைகாட்டும் இடப் பெயர்வுக் காட்சிதான் இது. கால் முறிந்த வாங்கு, பின்னல் விட்ட கதிரை, பெட்டி, கடகம், சட்டி பானைகள், கை சூப்பும் கடைக்குட்டிக் குழந்தை எல்லாவற்றையும் ஏற்றிக் கொண்டு சிற்றூர் ஒழுங்கைகளில் மாட்டு வண்டில்கள் நகர்கின்றன. தட்டியில் நிமிர்ந்த தடியைப் பிடித்தபடி, ஆட்ட அசைவுகளுக்கு ஈடு கொடுத்து, சாகசம் காட்டி எழுந்து நிற்கின்றான், சிறுவன் ஒருவன். இது வெறும் கற்பனை அல்ல. நேரிலே காணத்தக்க காட்சி ஒன்றின் செப்பமான விபரிப்பு.

தொகுத்து நோக்குகையில், சமூகப் பெறுமானமும் கலைப் பெறுமானமும் வாய்ந்த நல்லதோர் அறுவடையாய், 'வெளிப்பு' என்னும் தொகுதி அமைகிறது.

இ.முருகையனின் முன்னுரையிலிருந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு முட்டாள்கள்



இரண்டு முட்டாள்கள் ஓர் அகலமான கிணற்றைத் தோண்டும் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். கடும் வெயில். ஆதலால் உடல் எங்கும் வியர்வை வழிய, துன்பத்துடன் வேலை செய்து கொண்டிருந்தனர்.

அப்பொழுது குடையைப் பிடித்தபடி மேற்பார்வையாளர் அங்கு வந்தார். அவரைப் பார்த்ததும் இருவருக்கும் கோபம் வந்தது.

அவரைப் பார்த்த ஒருவன் "நாங்கள் இங்கு இவ்வளவு துன்பப்பட்டு வேலை செய்கிறோம். ஆனால் நீயோ மகிழ்ச்சியாக இருக்கிறாய். இது அநியாயம் மட்டுமல்ல; கொடுமையும் கூட" என்று கூச்சலிட்டான்.

இதைக்கேட்ட அவர், "நான் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் நீங்கள் துன்பப்படுவதற்கும் காரணம் இருக்கிறது. நான் அறிவாளி; நீங்கள் முட்டாள்கள்" என்று பதில் அளித்தார்.

இருவரும் இதைக் கேட்டுக் கடுங்கோபம் கொண்டனர்.

அவர்களில் ஒருவன் "நாங்கள் இருவரும் முட்டாள்கள் என்று நிரூபிக்க வேண்டும். இல்லாவிட்டால் உம்மைக் கொன்று விடுவோம்" என்று கத்தினான்.

ஆனால் அவரோ அமைதியாக, "யாராவது ஒருவன் மட்டும் மேலே வந்தால் அவன் எப்படிப்பட்ட முட்டாள் என்பதைக் காட்டுகிறேன்" என்றார். ஒருவன் மேலே ஏறி வந்தான். பக்கத்தில் இருந்த மரத்தில் தன் ஒரு கையை நன்றாகப் பதியும்படி வைத்தார் அவர். பிறகு அவனைப் பார்த்து "உன் கையால் எவ்வளவு பலமாக என் கையில் குத்த முடியுமோ குத்து" என்றார்.

உடனே அவன் தன் கையை இறுக மூடிக் கொண்டு அவரின் கையில் குத்துவதற்குக் கையை ஓங்கினான். ஆனால், அவரோ திடீரென்று தன் கையை இழுத்துக் கொண்டார். அவன் ஓங்கிய கை மரத்தில் பலமாகப் பட்டது. அவனால் வலி தாங்க முடியவில்லை. துடித்துப் போய் விட்டான்.




"இப்பொழுது புரிகிறதா முட்டாள் யார் என்று? போய் வேலையைப் பார்" என்று சொல்லி விட்டுச் சென்றார்.

வீங்கிய கையுடன் கிணற்றுக்குள் இறங்கினான் அவன்.

"என்ன நடந்தது?" என்று விசாரித்தான் மற்றவன்.

"அவர் சொன்னது சரிதான். நாம் முட்டாள்கள்" என்றான் அவன்.

அதற்கு மற்றவன் "எப்படி" என்று கேட்டான்.

நடந்ததை விளக்க வேண்டுமென்று நினைத்தான் முதலாமவன். பக்கத்தில் கை வைக்கக் கூடிய பொருள் ஏதும் இல்லாததை அறிந்த அவன் உள்ளத்தில் அருமையான யோசனை ஒன்று தோன்றிற்று. இரண்டு கைகளாலும் தன் முகத்தை மூடிக் கொண்டான். "நீ முட்டாள் என்பதை உணர வேண்டுமானால் முகத்தை மூடி இருக்கின்ற என் கைகளில் ஓங்கி ஒரு குத்து விடு. உனக்கு உண்மை விளங்கும்" என்றான். இதைக்கேட்டதும் மற்றவன் தன் கைகளை இறுக மூடிக்கொண்டு அவன் கைகளில் ஓங்கிக் குத்தினான். உடனே முதலாமவன் மேற்பார்லையாளர் செய்ததைப் போலத் தன் கைகளை முகத்தில் இருந்து எடுத்து விட்டான்.

ஆனால், பலமான குத்து அவன் முகத்தில் விழுந்தது. நான்கைந்து பற்கள் சிதறியதுடன் முகமும் வீங்கிவிட்டது. தாம் இருவரும் எவ்வளவு பெரிய முட்டாள்கள் என்று இப்பொழுது அவர்களுக்குப் புரிந்தது.

**தொகுப்பு : எம்.டபிள்யூ.அப்ரத் அஹ்மத்,**
**மாறை/அறபா தேசிய பாடசாலை, வெலிகம.**

## விடுகதைகள்

1. வீராப்புடன் பேசுவான். ஆனால், உள்ளிருந்து வெளியே வரமாட்டான். அவன் யார்?
2. உயரப் போட்டால் கீழே வருவான். கீழே போட்டால் உயரே வருவான். அவன் யார்?
3. அங்கும் இங்கும் நகர்வான். ஆனால் இடத்தை விட்டு வரமாட்டான். அவன் யார்?

விடைகள்

1. நாக்கு 2. பந்து
3. கதவு

**ரா.ப.றிஸ்வான்,**
**திருகோணமலை.**



## சிட்டுக்குருவியே! செல்லக்கிளியே!

தத்தி நடை போட்டு வரும்
சிட்டுக் குருவியே - நீ
இத்தனை நாள் எங்கிருந்தாய்
சொல்லு குருவியே!
முற்ற மெல்லாம் நெல்மணிகள்
கொட்டிக் கிடக்குதே! - அதை
கொத்தித் தின்ன நீயில்லையே!
எங்கு போனாயோ!
குண்டுப் பழத்தைக் கொத்தித் தின்னும்
பச்சைக் கிளியக்கா - நீ
எந்தன் வீட்டுத் தோட்டத்தை ஏன்
மறந்தாய் சொல்லக்கா
செல்லக் கிளியே உன்னை நான்
கூட்டில் இட மாட்டேனே - உன்
கொள்ளை அழகைக் காண்பதற்கே
எந்தன் மனம் நாடுதே.

**மாவடிவேம்பு -**
**[illegible]**

## சாய்ந்த கோபுரம்

இத்தாலியின் பைசா நகரில் சாய்ந்த கோபுரம் உள்ளது. முற்காலத்தில் பைசா ஒரு சிறந்த துறைமுகப் பட்டணமாகத் திகழ்ந்தது. பைசாவின் வடமேற்கு மூலையில் "கதீட்ரல் சதுக்கம்" என்ற இடம் உண்டு. அங்கு வெண்ணிற சலவைக் கல்லால் ஆனது தான் சாய்ந்த கோபுரம். இந்தக் கோபுரம் 1174 இல் கட்டத் தொடங்கி 1350 இல் முடிவடைந்தது. இது 8 மாடிகளைக் கொண்டது.

சாய்ந்த கோபுரமாக இது கட்டப்படவில்லை. கட்டிடத்தின் மூன்றாவது மாடி கட்டப்படும் போது கோபுரம் சாயத் தொடங்கியது. நேர்குத்து நிலைக்கு 16 1/2 அடி வரையில் சாய்ந்தது. மேல் மாடியில் மணிகள் உள்ளன. 300 படிகளைக் கொண்ட படிக்கட்டு இருக்கிறது. விழுந்து விடுவது போல் தோன்றினாலும் பல நூறு ஆண்டுகளாக அது விழாமல் நிற்கின்றது.

ஒவ்வொரு ஆண்டும் இது சிறிது சிறிதாகச் சாய்ந்து வருவதால், 50 ஆண்டுகளில் விழுந்து விடும் சாத்தியக்கூறுகள் உள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். எனினும், கீழே விழுந்து விடாமல் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சாய்ந்த கோபுரத்தின் உயரம் 179 அடி. இது உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

**ச.சந்தோஷன், தரம் - 7D,**
**யாழ்/இந்துக் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

## குண்டு குண்டு மல்லிகை!





குண்டு குண்டு மல்லிகை
கொடியில் பூத்துக் குலுங்குது
வண்டுக் கூட்டம் கூட்டமாய்
வந்து வந்து மொய்க்குது.
மூக்கைத் துளைக்கும் வாசனை
முகர்ந்து பார்த்திட ஆசை
முத்துப் போன்ற மல்லிகை
கொத்துக் கொத்தாய்ப் பூக்குது
பாவம் போக்கும் கடவுளின்
பாதம் சேரும் மல்லிகை
பாவையரின் கூந்தலில்
பகட்டாய் மிளிரும் மல்லிகை.

**சிவனேஸ்வரன் சவிதா, தரம் - 8,**
**வேம்படி மகளிர் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னப் பூஞ்சிட்டுக்கள்

## பேயிடம் சிக்கிய சீடன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பினாமிப் பேயிடமிருந்து தப்பியோடிய நகுலனைத் தேடிக் கொண்டு பினாமியும் ஓடினாள். சிறிது நேரத்தில் நகுலனின் அருகேயே வந்து விட்டாள். பினாமியின் நீண்ட கை அவனைப் பிடிக்க வரும்போது அவன் தன் இரண்டாவது தாயத்தை வீசி 'ஒரு பெரிய மணல் மேடு உருவாவதாக' என்றான். அவ்வாறே ஒரு மேடு உருவாகியது. மணல் பினாமியை வழுக்க வைத்தது. அவள் ஒரு அடி யூன் வைக்கும் போது அரை அடி வழுக்கினாள். இதனால் மணல் மேட்டில் ஏற அதிக நேரம் எடுத்தது. கடைசியாகப் பினாமி மணல் மேட்டையும் தாண்டி வந்து விட்டாள். அவள் திரும்பவும் நகுலனின் அருகே வந்து விட்டாள். நகுலன் உடனே மூன்றாவதும் கடைசியுமான தாயத்தையும் வீசி 'ஒரு பெரிய அகலமான ஆழமான ஆறு உண்டாவதாக' எனக் கூறினான். உடனே அங்கு ஒரு பெரிய ஆறு உண்டாயிற்று. பினாமி ஆற்றைக் கடக்க முயற்சிக்கும் போது நகுலன் விரைவாக ஓடிச் சென்றான். சிறிது நேரத்திலேயே மலைக் கோயிலை அடைந்து விட்டான்.

'குருவே, குருவே, நகுலன் வந்திருக்கிறேன். காப்பாற்றுங்கள், பினாமி என் பின்னால் வருகிறாள்' என்று கத்தினான். உள்ளே இருந்த குரு ஒரு பதற்றமும் இன்றி 'நான் உனக்கு இதற்குத் தான் போக வேண்டாம் என்றேன்' என்றார்.

'சீக்கிரம், சீக்கிரம் கதவைத் திறவுங்கள். இல்லையேல் பினாமி என்னைச் சாப்பிட்டு விடுவாள்.' என அழுதான். 'நீ நல்ல ஒரு பாடம் கற்றிருப்பாய் என்று நினைக்கிறேன்' எனக் கூறியபடி கதவைத் திறந்தார் குரு. பின்னர் குரு நகுலனைச் சமயலறையின் ஒரு துவாரத்தில் ஒளித்து வைத்தார். அவர் துவாரத்தின் மேல் ஒரு பானையை வைக்கும் போது தான் பினாமி தோன்றினாள். அவள் சமையலறையில் எல்லா இடங்களிலும் தேடியும் எங்குமே நகுலனைக் காணவில்லை. அவள் குருவைப் பார்த்து 'குருவே உம்முடைய அந்தச் சிறு சீடன் எங்கே?' எனக் கேட்டாள்.

குரு நெருப்பின் அருகே அமர்ந்து 'துக்கி'யை சூடாக்கத் தொடங்கினார். (துக்கி என்பது ஒரு வகையான உணவுப் பொருள். அது பேய்களுக்கு மிகப் பிடித்தது) குரு, 'என் சீடன் இங்கில்லை. அவன் நேற்று முந்திரிக்கொட்டை சேகரிக்கக் காட்டிற்குச் சென்றான். இன்னும் திரும்பி வரவில்லை' என்றார்.


'பொய் சொல்லாதே, அவன் என்னை ஏமாற்றி விட்டான். அவன் இங்குதான் இருக்கிறான் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்' என்றாள் பினாமி. 'சரி, நீ என்னை நம்பாவிட்டால் சமையலறையில் போய்த் தேடிப்பார்' என்றார் குரு. அவர் இவ்வாறு கூறி விட்டுத் துக்கியைச் சூடாக்கிக் கொண்டு இருந்தார். துக்கியின் வாசனை சமையலறை முழுதும் பரவியது.

துக்கி வாசனை பினாமியின் மூக்கைத் துளைத்தது. அவள், பூசாரியிடம் 'எனக்கும் கொஞ்சம் துக்கி தாருங்கள்' எனக் கேட்டாள். 'நான் தருகிறேன். ஆனால் நீ எனக்காக ஒன்று செய்ய வேண்டும். உன்னால் வித்தியாசமான உருவங்களை எடுக்க முடியும் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதை நான் பார்க்க வேண்டும். அப்படி நீ செய்தால் துக்கிகள் அனைத்தையும் தருகிறேன்' என்று கூறினார் குரு.

'சரி' என்று பினாமி கூறினாள். 'உன்னால் எவ்வளவு பெரிதாகவும், சிறிதாகவும் முடியும் என நான் பார்க்க வேண்டும்' என்றார் பூசாரி. 'சரி' என்று பினாமி கூறினாள்.

''பினாமியே, பினாமியே உயரமாக வளரு, இன்னும் உயரமாக' என்று கூறியவுடன் பினாமி வளரத் தொடங்கினாள். அவள் கோயிற் கூரையின் அளவுக்கு வளர்ந்தாள். பின் குனிந்து கீழ் நோக்கியும் வளர்ந்தாள். இதைக் கண்ட குருவும் ஒரு கணம் பயந்தார். ஆனால் அவர் அதனை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. பின்னர் அவள் ''பினாமியே, பினாமியே சிறிதாக மாறு'' என்று கூறினாள். இன்னும் சிறிதாக மாறு' என்றார். பினாமி இப்போது சிறிதாக மாறத் தொடங்கினாள். அவள் இப்போது ஒரு சப்பாத்து அளவுக்கு மாறி விட்டாள். உடனே குரு, பினாமி கூறியவற்றையே கூறினார். 'பினாமியே பினாமியே, இன்னும் சிறிதாக மாறு' பினாமி இன்னும் சிறிதாகினாள். அவள் இப்போது ஒரு கரப்பான் பூச்சி அளவுக்குச் சிறிதாக மாறினாள். உடனே குரு இரு துக்கிகளை எடுத்துப் பினாமியை ஒரு துக்கியின் மேல் வைத்து மற்றையதை அதன் மீது வைத்து விழுங்கினார். பினாமி குருவின் வயிற்றில் ஜீரணமாகிவிட்டாள்.

எஸ்.ஷர்மினி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இறப்பர்

"மனிதனுக்கு அதிகமாகப் பயன்தரும் மரங்களில் இறப்பர் மரமும் ஒன்றாகும். இறப்பர் மரத்தின் பால் மிகப் பெறுமதி வாய்ந்ததொன்றாக உள்ளது"





## இறப்பருடன்

இன்று உள்நாட்டில் நாம் பயன்படுத்தும் பல பொருட்கள் இறப்பரினாலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. இறப்பர் மரத்தின் பல பகுதிகள் பொருட்கள் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

**இறப்பர் மரத்தின் பகுதிகளிலிருந்து தயாரிக்கப்படும் உற்பத்திகள்**

* இறப்பர் விதைகள்
* எண்ணெய், விலங்குணவுகள்
* பதப்படுத்தப்பட்ட பால்

பலூன், பந்து கையுறைகள், இறப்பர் பட்டிகள், இறப்பர் மெத்தைகள், அச்சு வகைகள், சீட் இறப்பர், கிறேப் இறப்பர், கட்டி இறப்பர் மற்றும் காய வைக்கப்பட்ட இறப்பர் டயர், விளையாட்டுப் பொருட்கள், இறப்பர் பந்து, இறப்பர் சப்பாத்துக்கள், செருப்புகள்.

* இறப்பர் பலகைகள்
* விறகு

இன்று இயற்கை இறப்பரில் 60% ஆனவை, எமது போக்கு வரத்துத் தேவைக்காகவே பயன்படுத்தப்படுகின்றன. டயர், டியூப், புதுப்பிக்கப்படும் டயர்கள், வாகன இருக்கைகள் ஆகியவற்றை உதாரணமாகக் கூறலாம்.

**"1890 ஆம் ஆண்டளவில் இறப்பர் பயிர்ச்செய்கை தோட்டப் பயிர்ச்செய்கையாகவே சிறியளவில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் 1934 ஆம் ஆண்டின் பின் இறப்பர் பயிர்ச் செய்கைக்கான நிலத்தின் அளவு அதிகரிக்கப்பட்டது. 1942 ஆம் ஆண்டளவில் சார்ள்ஸ் கூட் இயர் மற்றும் தோமஸ் ஹெனொன் ஆகிய இருவராலும் இறப்பர் கெட்டியாக்கற் பொருள் (Vulcanize) உற்பத்தி தொடங்கப்பட்டது. 1900 ஆம் ஆண்டில் மோட்டார் வாகனங்களின் உற்பத்தி மற்றும் இறப்பர் கெட்டியாக்கற் பொருள் உற்பத்தி என்பவற்றின் காரணமாக உலக சந்தையில் இறப்பருக்கான கேள்விகள் அதிகரித்தன.**



வெட்டப்பட்ட இறப்பர் மரத்திலிருந்து பால் பெறப்படுகின்ற

நீண்ட காலங்களிற்கு முன்பு "டியூக் ஒப் டெவோன்சயர்" என்ற பெயருடைய மிகப் பெரிய கப்பலொன்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. அக்கப்பலிலிருந்து பெருந்தொகையான காட்டு மரக்கன்றுகள் இறக்கப்பட்டன. கப்பலிலிருந்து இறக்கப்பட்ட அக்காட்டு மரக்கன்றுகள் இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி வெற்றி கண்டன. இலங்கையில் மட்டுமன்றி, முழு ஆசியாக் கண்டத்தின் பொருளாதாரத்தையும் எழுச்சி காணச் செய்வதற்கு இக்காட்டு மரக்கன்றுகள் உதவும் என எவரும் எண்ணிப் பார்க்கவில்லை.

அக்கன்றுகள்தான் நாம் அனைவரும் அறிந்த இறப்பர் மரங்களாகும். தென்னமெரிக்காவின் அமேசன் நதிக்கரையோரமே இறப்பர் மரத்தின் தாயகமாகும். வெளிநாட்டவர்கள் இறப்பர் மரத்தினைப் "பரா இறப்பர்" என்றும், "கண்ணீர் சிந்தும் மரம்" என்றும் அழைத்தனர். தாவரவியல் விஞ்ஞானிகள் இம்மரத்தினை "ஹெவியா பிறேசிலியென்சிஸ்" (Hevea Brasiliensis) என்று அழைக்கின்றனர். இறப்பர் மரத்தினை இலங்கைக்கு அறிமுகப்படுத்திய பெருமை "ஹென்றி விக்ஹேம்" என்பவரையே சேரும்.

இவ்விதம் கொண்டு வரப்பட்ட இறப்பர் மரங்கள் முதன் முதலில் கம்பஹாவிலுள்ள 'ஹெனெரன்கொட்' தாவரவியல் பூங்காவிலும் மற்றும் பேராதனை தாவரவியல் பூங்காவிலும் நடப்பட்டன. இறப்பர் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பு இலங்கையில் கோப்பிச் செய்கையே நடைபெற்று வந்தது. 1890 ஆம் ஆண்டு தோட்டப் பயிர்ச்செய்கையாக சிறியளவில் இறப்பர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் 1934 இன் பின் இறப்பர் பயிர்ச்செய்கைக்கான நிலத்தின் அளவு அதிகரிக்கப்பட்டது. 1942 ஆம் ஆண்டளவில் 'சார்ள்ஸ் கூட் இயர்' மற்றும் 'தோமஸ் ஹேனொன்' ஆகிய இருவரும் இறப்பரை உருவாக்கத் தொடங்கியதுடன் 1900 ஆம் ஆண்டளவில் மோட்டார் வாகனங்களை உற்பத்தி செய்யவும் தொடங்கிய காரணத்தால் சந்தையில் இறப்பருக்கான கேள்விகள் அதிகரித்தன.

### இறப்பர்ச் செய்கைக்கு அவசியமான புவியியல் காரணிகள்

* 27° செல்சியஸ் வெப்பநிலை
* 2000 மில்லிமீற்றருக்கு அதிகமான மழைவீழ்ச்சி
* 300 மீற்றருக்கு மேற்பட்ட நிலம்
* கபொக் மண்

### இலங்கையில் இறப்பர் செய்கை பண்ணப்படும் இடங்கள்

**அதிகமான இறப்பர் பயிர்ச்செய்கை நடைபெறும் பிரதான இடங்கள்:-**
**களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, கொழும்பு.**
**சிறியளவில் இறப்பர் பயிர்ச்செய்கை நடைபெறும் இடங்கள்:-**
**மாத்தளை, கண்டி, காலி, மாத்தறை, பதுளை.**

**இறப்பர் மரமானது கம்பஹா "ஹெனேரன்கொட்" தாவரவியல் பூங்காவிலும் பேராதனை தாவரவியல் பூங்காவிலுமே முதன் முதலில் நடப்பட்டன.**

### இறப்பர் பயிர்ச் செய்கைக்கு உகந்த மண் பிரிவுகள்

* பாரம்பே மண் பிரிவு.
* ஹோமாகம மண் பிரிவு
* அகலவத்தை மண் பிரிவு
* இரத்தினபுரி மண் பிரிவு
* தெனிய மண் பிரிவு
* மாத்தளை மண் பிரிவு

மனிதனுக்குப் பயனைத் தரும் மரங்களில் இறப்பர் மரமும் ஒன்றாகும். இம்மரத்திலிருந்து பெறப்படும் பால் ஒரு பெறுமதி வாய்ந்த பொருளாகக் கருதப்படுகின்றது.

### இறப்பர் உற்பத்தி

**இறப்பர் பால் இறப்பராக மாற்றப்படும் முறை**

இறப்பர் மரத்தைக் கீறுதல், பால் சேகரித்தல், பாலை உறையவிடல், இறப்பர் கட்டுக்களைக் காய வைத்தல், களஞ்சியப்படுத்தல், இறப்பருக்கு புகையூட்டல், சீட் இறப்பர், கட்டி இறப்பர், கிறேப் இறப்பர் மற்றும் பதப்படுத்தப்பட்ட பால்.

புகையூட்டிய இறப்பர் உற்பத்தி, வீடுகளிலும், கைத்தொழிற்சாலைகளிலும் நடைபெறும். ஆனால் கட்டியாக்கப்பட்ட இறப்பர் மற்றும் கிறேப் இறப்பர் உற்பத்தி, பெருந்தொழிற்சாலைகளில் மட்டுமே நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ப்பர் செய்கையின் வளர்ச்சி

## ...ன் தொடர்புடைய உற்பத்திகள்

இறப்பர் பாலைக் கொண்டு பொருட்களை உற்பத்தி செய்தல் இரு விதங்களில் செய்யப்படுகின்றன.

- முழுமையாகப் பயன்படுத்தல்
- அச்சுப் பதித்தல் மூலம்

இறப்பர் பாலில் முழுமையாக அமிழ்த்துவதன் மூலம் இறப்பர் பட்டிகள், குழாய்கள், கையுறைகள் என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன. இறப்பர் பொருட்களின் உற்பத்தியின் போது பொருட்களின் தரம் முக்கியமாக கவனத்திற் கொள்ளப்படும். இது தொடர்பாக அகலவத்தையிலுள்ள இறப்பர் ஆராய்ச்சி நிலையம் கூடுதலாகக் கவனம் எடுத்து வருகின்றது. இறப்பரின் தர நிர்ணயம் தொடர்பாக ஆராய்ச்சி நிலையம் பல கருத்துக்களை முன் வைத்துள்ளது.

**முன் வைத்துள்ள கருத்துக்கள்**

- பால் சேகரிப்பதற்காக எடுக்கப்படும் சிரட்டைகள் மற்றும் ஏனைய பொருட்களைச் சுத்தமாக வைப்பதன் மூலம் பக்டீரியா மற்றும் பிற கழிவுப் பொருட்கள் கலப்பதைத் தடுக்கலாம்.
- சேகரிக்கப்படும் பால் கூடிய விரைவில் உறைய விடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- குறிப்பிட்ட அளவு நீரைச் சேர்த்தல் மற்றும் பொருத்தமான வடிகட்டி மூலம் வடித்தல்.
- பால் கட்டியாவதற்குத் தேவையான இரசாயனப் பொருட்களைச் சேர்த்தல்.
- அசிட் சேர்க்கப்பட்ட பின் உருவாகும் நுரைகளை அகற்றுதல்.
- பொருத்தமான தடிப்பில் இறப்பர் சீட்களைத் தயாரித்தல்.
- காய வைக்கப்பட்ட இறப்பரை உலர்ந்த இடத்தில் களஞ்சியப்படுத்தல்.

**இறப்பர் வர்த்தகம்**

ஒரு இறப்பர் மரத்தின் பொருளாதாரப் பெறுமதியானது 30 வருடங்களுக்கு மட்டுமே இருக்கும். அதன்பின் பழைய மரங்களை வெட்டி புதிய மரங்களை நடவேண்டும். இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் இறப்பர் பொருட்களில் 65% ஆனவை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. ஆனால் உலக சந்தையில் (ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது) இத்தொகையானது 4% ஆகவே உள்ளது. இங்கு உள்நாட்டு நுகர்விற்காக 35% ஆனவை பயன்படுத்தப்படுகின்றன.



...றப்படுகின்றது.

### இலங்கையில் இறப்பர் உற்பத்தி (கிலோகிராம் மில்லியனில்)

| இறப்பர் பயிர்ச்செய்கை | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 |
|---|---|---|---|---|---|
| சீட் இறப்பர் | 44.9 | 43.8 | 40.09 | 42.2 | 53.2 |
| கிறேப் இறப்பர் | 33.5 | 33.3 | 38.4 | 34.9 | 41.5 |
| கட்டி இறப்பர் மற்றும் பிற உற்பத்திகள் | 27.7 | 27.1 | 26.0 | 28.6 | 17.7 |

### இறப்பர் வர்த்தகம் தொடர்பான விபரங்கள்

| | அலகு | 1997 | 2000 |
|---|---|---|---|
| உற்பத்தி | பத்து லட்சம் கி.கிராம் | 97 | 87 |
| பயிரிடப்படும் நிலப்பரப்பு | ஹெக்டேயர் | 159 | 158 |
| புதிதாக பயிரிடப்படுவது | ஹெக்டேயர் | 218 | 251 |
| உள்நாட்டு நுகர்வு | பத்து லட்சம் கி.கிராம் | 54 | 55 |
| ஏற்றுமதியளவு | பத்து லட்சம் கி.கிராம் | 43 | 33 |
| ஏற்றுமதியால் கிடைப்பது | ரூபாய் பத்து லட்சம் | 2305 | 2179 |

**இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் இறப்பரில் அதிகமான அளவு சீனாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.**

**இலங்கையிலிருந்து இறப்பரை இறக்குமதி செய்யும் நாடுகள் கீழ் வருமாறு:-** சிங்கப்பூர், பாகிஸ்தான், ஜப்பான், கொரியா, ஐக்கிய இராச்சியம், மெக்ஸிக்கோ, ஜேர்மனி.

**சர்வதேச வர்த்தக சந்தையில்** தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், மலேஷியா என்பன இறப்பர் ஏற்றுமதியில் இலங்கையுடன் போட்டியிடுகின்றன.

- எஸ்.கிறேஸ்






இறப்பர் விதைகள்






இறப்பர் பால் தட்டுக்கள்



இறப்பரில் இருந்து நீரை அகற்ற



இறப்பர் ரொட்டி தயாரித்தல்



புகையூட்டிக்குத் தீ மூட்டல்



புகையூட்டும் தட்டுக்கள்



காயவைக்கப்பட்ட இறப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை முறை

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்பு அநேகமானவர்கள் கிராமப் புறங்களில் விவசாயிகளாகவே வாழ்ந்து வந்தனர். ஆனால் 2ம் உலக யுத்தத்தின் பின் மக்கள் கைத்தொழில் துறை மீது கூடிய கவனம் செலுத்தத் தொடங்கினர்.

கிராமப் பகுதிகளில் வாழ்வோரில் அநேகமானவர்கள் பாரம்பரிய விவசாய முறைகளைப் பின்பற்றியே விவசாயம் செய்கின்றனர். நகரை அண்டிய பகுதிகளில் வாழ்வோர் சிறிய வீடுகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். உரோமன் கத்தோலிக்க மதம் பலரது வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது.

அயர்லாந்து மக்கள் சாதாரணமாகக் கலைகளைப் பெரிதும் விரும்புகின்றனர். இசை மற்றும் நடனம் என்பவை இங்குள்ள மக்கள் விரும்பும் கலைகளாக உள்ளன.





## பொருளாதாரம்

ஆரம்பத்தில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டே பொருளாதாரம் செயற்பட்டது. பின்னர் கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகள் மீது கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. ஆனால் இன்றும் அநேகமானோர் விவசாயத் துறையிலேயே ஈடுபட்டு வருகின்றமையால் பொருளாதார வளர்ச்சிக்கு இவர்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே கிடைக்கின்றது. இன்று ஐரோப்பிய சமூகத்துடன் அயர்லாந்து சேர்ந்துள்ளமையால் பொருளாதாரம் பலமிக்கதாக உள்ளது.

# அயர்லாந்து




2

- ✱ தேறிய தேசிய உற்பத்தி : 113.7 பில்லியன் டொலர்
- ✱ தேறிய தேசிய உற்பத்தி வளர்ச்சி : 6.9%
- ✱ தனி நபருக்குரிய வருமானம் : 29,300 டொலர்
- ✱ வறியோரின் எண்ணிக்கை : 10%
- ✱ தொழிலாளரின் எண்ணிக்கை : 1.8 மில்லியன்
- ✱ வேலையற்றோர் : 4.3%
- ✱ கைத்தொழில்கள் : உணவு தயாரித்தல், குடிவகைகள், ஆடை உற்பத்தி, இரசாயனப் பொருள் உற்பத்தி, மருந்து வகைகள், இயந்திர சாதனைகள், போக்குவரத்து உபகரணங்கள், கண்ணாடி மற்றும் பளிங்குப் பொருட்கள்.
- ✱ கைத்தொழில் வளர்ச்சி வேகம்: 6%
- ✱ ஏற்றுமதி : 86.6 பில்.டொலர்
- ✱ ஏற்றுமதிப் பொருட்கள் : இயந்திர உதிரிப் பாகங்கள், கணினி, இராசயனப் பொருட்கள், மருந்து, விலங்கு மற்றும் விலங்குணவு உற்பத்திகள்.
- ✱ ஏற்றுமதி நாடுகள் : பிரித்தானியா, அமெரிக்கா, பெல்ஜியம், ஜேர்மன், பிரான்ஸ்
- ✱ இறக்குமதி : 48.6 பில்.டொலர்
- ✱ இறக்குமதிப் பொருட்கள் : பற் சிகிச்சை உபகரணங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள் பெற்றோலியம் மற்றும் அதனையொட்டிய பொருட்கள், ஆடை வகைகள்.
- ✱ இறக்குமதி நாடுகள் : பிரித்தானியா, அமெரிக்கா, ஜேர்மனி.
- ✱ நாணயம் : யூரோ (Euro)



## 'விஜய்' சந்தா விபரம்

"விஜய்" பத்திரிகைக்கு சந்தா செலுத்தி தபால் மூலமும், நேரடியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

| | 1 வருடம் | 6 மாதம் |
|---|---|---|
| நேரடி . விநியோகம் (கொழும்பிற்குள்) | ரூ 520/= | ரூ 260/= |
| தபால் மூலம் | ரூ 936/= | ரூ 468/= |

பின்வரும் கூப்பனை பூர்த்தி செய்து அனுப்புங்கள்.
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

பெயர் ..........
முகவரி ..........
தொ.பே.இல ..........
மின் அஞ்சல் (E-mail) ..........
விண்ணப்பிப்பது : பாடசாலை/நிறுவனம்/வாசகர்/
(தேவையற்றதை வெட்டிவிடுங்கள்)
எமக்கு .............. மாதம்/வருடத்திற்கான இதழ்களை அனுப்பி வைக்கவும்.

கையொப்பம் திகதி

உங்கள் சந்தாத் தொகையினைக் காசுக் கட்டளையாகவோ (Money Order) காசோலையாகவோ (Cheque) அனுப்பலாம். காசுக் கட்டளையை (Money Order) மாற்றும் தபால் கந்தோர் SLAVE ISLAND POST OFFICE எனக் குறிப்பிடவும். காசோலை (Cheque) அனுப்புவோர் Wijeya News Papers Ltd என்ற பெயருக்கு எழுதவும்.

அனுப்பவேண்டிய முகவரி: CIRCULATION MANAGER, Wijeya News Papers Ltd, No-08, Hunupitiya Cross Road, Colombo 02.

மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல 2314714 Ext 523.

## நிர்வாகம்

அயர்லாந்து ஒரு ஜனநாயக நாடாகும். 1937 ஆம் ஆண்டு முதல் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பின் படி அங்கு நிர்வாகம் நடைபெற்று வருகின்றது.

நாட்டின் நிறைவேற்று அதிகாரம் பாராளுமன்றத்திடமும் அமைச்சரவையிடமும் உள்ளது. இதன் தலைவராகப் பிரதமர் இருப்பார். இவரே அரசாங்கத்தின் தலைவர். பாராளுமன்றத்தின் கீழ்ச் சபையிலுள்ள அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதும் அமைச்சரவை ஒன்றை உருவாக்குவதும் பிரதம மந்திரியின் கடமையாகும்.

ஜனாதிபதி மக்கள் வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படுவார். பாராளுமன்றம் இரண்டு பிரிவுகளைக் கொண்டது. மொத்த அங்கத்தவர்களின் தொகை 166 ஆகும். 60 பேர் மேற்சபையையும் 106 பேர் கீழ்ச் சபையையும் சேர்ந்தவர்களாக இருப்பர். அதிகளவான அதிகாரம் கீழ்ச் சபை அங்கத்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எஸ். கிறேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம்

படிப்பினைக் கதை



கபிலன் வகுப்பில் மகா குழப்படிக்காரன். ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களில் அவன் கவனம் செலுத்துவதே இல்லை. தானும் கற்காமல் சக மாணவர்களையும் குழப்பிக் கொண்டிருப்பதே அவனது வழக்கமாக இருந்து வந்தது. ஆனால் வகுப்பில் பரீட்சை நடக்கும் காலங்களிலோ சிறப்பாகவே வினாத்தாள்களுக்கு விடை எழுதி வந்தான். இதனால் அவனுக்கு நல்ல புள்ளிகளும் கிடைத்தன. ஆசிரியர்களுக்கு இது ஆச்சரியமாகவே இருந்து வந்தது. பாடங்களில் அக்கறை காட்டாதவன் எப்படி இவ்வாறு கூடிய புள்ளிகளை எடுக்கின்றான் என்று ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் ஆச்சரியப்பட்டனர். ஆனால் இவர்களுக்குத் தெரியாத பல விஷயங்களை அவன் இரகசியமாகவே செய்து வந்தான்.

அதாவது, வகுப்பில் தனக்கு அருகே அமர்ந்திருக்கும் ராஜனின் புண்ணியத்தில்தான் கபிலனால் கூடிய புள்ளிகளைப் பெற முடிந்துள்ளது என்பது ரகசியமாகவே இருந்தது. வகுப்பில் பரீட்சை நடக்கும் போது, சக மாணவன் ராஜனிடம் ரகசியமாக விடைகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டு எழுதிவிடுவான். ராஜனும் இவன் மீதிருந்த பயத்தினால் இதனை யாருக்கும் சொல்லாமலே இருந்து வந்தான். இப்படியிருக்கையில் வருட இறுதிப் பரீட்சையும் வந்தது. பரீட்சையன்று பாடசாலைக்கு வருவதற்கு ஆயத்தமான கபிலனுக்கு எந்தவித பதற்றமும் இருக்கவில்லை. வழக்கம் போலவே பாடசாலைக்குச் சென்றான். சக மாணவர்கள் எல்லோரும் பரீட்சையை நன்றாகச் செய்யவேண்டும் என்ற ஆர்வத்தில் குழுமியிருந்து மீட்டல் வேலைகளிலும், மனனம் செய்வதிலும் ஈடுபட்டிருந்தனர். ஆனால் கபிலனுக்கோ இவர்களைப் பார்க்கச் சிரிப்பாக இருந்தது.

"இவ்வளவு கஷ்டப்பட்டுப் படித்து எதைச் சாதிக்கப் போகின்றார்கள்?" என அவன் தனக்குள்ளேயே ஏளனமாக நினைத்துக் கொண்டான். ஏதோ தன் பாட்டில் ஊர் வம்புகளைப் பார்ப்பவனாக ஏனோதானோ என்கிற போக்கில் அவன் இருந்தான்.

பரீட்சை ஆரம்பமாகும் நேரம் நெருங்கியது. மாணவர்கள் எல்லோரையும் பரீட்சை நடைபெறும் மண்டபத்துக்குச் செல்லுமாறு ஆசிரியர்கள் கட்டளையிட்டனர். எல்லோரும் அவசர அவசரமாகப் பரீட்சை அறையை நோக்கிச் சென்றனர். கபிலனும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றான்.

எல்லோரும் அவரவர்களின் சுட்டெண் படி அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஆசனங்களில் சென்றமர்ந்தனர். அப்போதுதான் கபிலன் அதிர்ச்சியடைந்து போனான். வழமை போல் சக மாணவனான ராஜனின் பக்கத்தில் அமர்ந்து பார்த்தெழுத முடியும் என எண்ணிக் கொண்டிருந்தவனுக்குச், சுட்டெண் வரிசைப்படி இருக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் வேறொரு மாணவனுக்கு அடுத்த படியாகவே அவன் அமர வேண்டியிருந்தது. ராஜன் எங்குள்ளான் எனக் கபிலன் தேடிப் பார்த்தான். ராஜன் எங்கோ ஒரு தொலைவில் அமர்ந்திருந்தான். கபிலனுக்கோ தூக்கி வாரிப்போட்டது. தனது எல்லா எதிர்பார்ப்பும் தவிடுபொடியாகி விட்டதே என்று கவலைப்பட்டான். தனக்குரிய ஆசனத்தில் மெதுவாகச் சென்று அமர்ந்தான். எல்லோருக்கும் வினாத்தாள்கள் வழங்கப்பட்டன. கபிலனும் பெற்றுக் கொண்டான். ஆனால் அவனுக்கு எந்தவொரு வினாவுக்கும் விடை எழுதத் தெரியவில்லை. வசமாக மாட்டிக் கொண்டோமே என எண்ணினான். இப்போதுதான் அவனுக்குத் தனது தவறு நன்றாகப் புரிந்தது.

பரீட்சை முடிந்து சில தினங்களின் பின்னர் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின. கபிலனோ எந்தவொரு பாடத்திலும் சித்தி பெறத் தவறியிருந்தான். வகுப்பு மாணவர்கள் எல்லோரும் அவனை ஏளனமாகப் பார்த்தனர். கபிலன் வெட்கத்தால் தலை குனிந்தான். தனது தவறை நன்றாக உணர்ந்த அவன் இனிமேல் ஆசிரியர்களின் சொற்படி நடந்து, நன்றாகப் படித்துத் தேறுவதென முடிவெடுத்தான்.

சொந்த முயற்சியில் கற்றுத் தேறுவதற்குப் பதிலாகக் குறுக்கு வழியைப் பயன்படுத்தினால், பயனிழந்து, அவமானப்படுவதே மிச்சமாகும். எனவே, அவரவர் தத்தமது சொந்த முயற்சியிலேயே எப்போதும் நம்பிக்கை வைத்தல் வேண்டும்.



அங்.இல : 529

எம்.என்.யுஸ்ரா பானு, தரம் 7, மா/கிருந்தை மு.த.வி, புஹுல்வல்ல.



அங்.இல : 530

அ.சதீஸ், தரம் - $12^{A}$, யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்., புத்தூர்.



அங்.இல : 531

எம்.எப்.சப்ரினா, தரம் - $10^{B}$, புத்/உமர் பாருக் ம.வி, முந்தல்.



அங்.இல : 532

பெ.துஷாந்தினி, தரம் - $8^{B}$, க/கதிரேசன் கனிஸ்ட வித், நாவலப்பிட்டி.



அங்.இல : 533

எம்.ஜே.எம்.மலாதிம், தரம் - $11^{B}$, யக்கஸ்முல்ல மு.ம.வி, வீரகெட்டி.



அங்.இல : 534

ஐ.நவாலிஸ், தரம் - $4^{A}$, மட்/பிறைந்துறைச்சேனை அஸ்ஹர் ம.வி, ஓட்டமாவடி.

விஜய் மாணவர் கழகம் விஜய் மாணவர் கழகம் விஜய் மாணவர் கழகம்



அங்.இல : 535

பெ.முகுந்தன், தரம் - 12, வவு/தமிழ் ம.ம.வி, வவுனியா.



அங்.இல : 536

அ.மேரி ஜக்குலின், தரம் - 10, பது/பட்டவத்தை த.வி, கொக்காகலை.



அங்.இல : 537

எ.சசிதரன், தரம் - $12^{A}$, ஸ்ரீ முத்துமாரியம்மன் த.வி, புஸ்ஸல்லாவ.



அங்.இல : 538

என்.எம்.என்.அஸ்லன், தரம் $10^{B}$, தி/விபுலானந்தா கல்லூரி, திருகோணமலை.



அங்.இல : 539

ஏ.எஸ்.நஸ்ரியா பேகம், தரம் 12, அல் அஸ்ரா ம.வி, புத்தளம்.



அங்.இல : 540

ப.சதீஷன், தரம் - $12^{A}$, மு/மல்லாவி ம.க, யோகபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ආයුබෝවන් ஆயுபோவன் வணக்கம்
## பின்வரும் சொற்களின் உச்சரிப்பை அறிந்து கொள்ளுவோம்




| சொற்கள் | | உச்சரிப்பு | பொருள் |
|---|---|---|---|
| කැමකි | | கැம கි | உணவாகும் |
| | කැ | Camp = කැ | |
| | | அக்கி - කි | |
| කැමතියි | | கැம தියි | விருப்பம் |
| | කැ | Cap = කැ | |
| | ති | கத்தி = ති | |
| සෑදීමට | | சැදී ம ட | செய்வதற்கு |
| | සෑ | Sand = සෑ | |
| | දී | These - දී | |
| | ට | பட்டம் = ට | |
| බිත්තර | | பித்தர | முட்டைகள் |
| | බි | B = බි | |
| උපන්දින | | உபன்தின | பிறந்ததினம் |
| | ප | அப்பம் = ප | |
| | දි | This = දි | |

## கேக் பற்றிய வாக்கியங்கள் சில



1. කේක් රසවත් කෑමකි
   கேக் றசவத் கෑமකி
   கேக் மிக உருசியான உணவு
2. කේක් කන්න කවුරුත් කැමතියි
   கேக் கன்ன கவுறுத் கැமதிய்
   கேக் சாப்பிட எல்லோரும் விரும்புவர்
3. කේක් සෑදීමට පිටි, සීනි, බිත්තර, බටර් අවශ්‍යයි
   கேக் சැදීமட பிடி சீனி பித்தற பட்டர் அவஸ்யய்
   கேக் செய்வதற்கு மா, சீனி, முட்டை, பட்டர் அவசியம்
4. නොයෙක් හැඩයෙන් කේක් සාදනවා.
   நொயெக் ஹැடயென் கேக் சாදனவா
   பல உருவங்களில் கேக் செய்வார்கள்
5. උපන් දින උත්සවයට කේක් දෙනවා.
   உபன்දින உத்சவයට கேக் දெனவா
   பிறந்ததின விழாவிற்கு கேக் தருவார்கள்
6. මංගල උත්සවයට කේක් දෙනවා
   மங்கள உத்சவයට கேக் දெனவா
   மங்களகர விழாக்களுக்கும் கேக் தருவர்
7. දැන් ලොකු කේක් හදනවා
   දැன் லொ(க்)கு கேக் ஹදனவா
   இப்போது பெரிய கேக்குகளும் செய்வர்

## කියවීම කියවීம - வாசிப்பு







කේ - கே

| | |
|---|---|
| කේ | කේක් |

| | |
|---|---|
| කේ | ක් |
| கே | க் |


කේක්

## பயிற்சி - අභ්‍යාසය
### கீறிட்ட இடங்களை நிரப்புங்கள்



උදා:- ____ ක්
කේක්

1. කේ ____
2. ____ රසවත් කෑමකි.
3. උපන් දිනයට ____ දෙනවා.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்

அற்லஸ்




இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்குச் சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாகச் சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

# அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...



## பணி பகிஷ்கரிப்புப் போராட்டம்

இந்திய விமான நிலைய ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்புப் போராட்டமொன்றில் ஈடுபட்டமையின் காரணமாக விமான நிலையங்களில் பெரும் குளறுபடிகள் ஏற்பட்டதால், முக்கிய விமான நிலையங்கள் சிலவற்றை பொலிஸார் பொறுப்பேற்று நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இச்சம்பவம் பெப்ரவரி 2 ஆம் திகதி நிகழ்ந்தது. இந்திய விமான நிலையங்கள் அனைத்தும் தனியார் மயப்படுத்தப்பட வுள்ளதாகச் செய்தியொன்று பரவியதன் பிரதிபலிப் பாகவே மேற்படி போராட்டம் நிகழ்ந்துள்ளது. இவ்வாறு தனியார் மயப்படுத்தலினால் பலர் தமது தொழில் வாய்ப்பை இழக்க வேண்டியேற்படும் எனக் கருதியே இதற்குத் தமது எதிர்ப்பினைக் காட்டுமுகமாக விமான நிலைய ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக விமான நிலையத்தில் குப்பை கூழங்கள் நிரம்பி வழிந்தன. மலசலகூடங்களும் சுத்தப்படுத்தப்பட்டிருக்கவில்லை. புதுடெல்லி விமான நிலையத்திற்குப் பயணிகள் வருகை தரும் பாதைகளின் குறுக்காக இருந்து ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் செய்தமையினால் பயணிகள் மாற்று வழிகளினூடாகவே விமான நிலையத்தைச் சென்றடைய வேண்டியிருந்தது.

## டென்மார்க் மீது அதிருப்தி!

முஹமது நபி அவர்களின் உருவம் எனக் கற்பனையான கேலிச் சித்திரமொன்றைப் பத்திரிகையில் சித்தரித்தமைக்கு எதிராக உலகெங்கிலும் பரவி வாழும் முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்தி வருகின்றனர். டென்மார்க் நாட்டிலிருந்து வெளிவருகின்ற ''ஜெயிலண்ட் பொஸ்டன்'' என்ற பத்திரிகையிலேயே மேற்படி கேலிச் சித்திரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதே சித்திரத்தைப் போலந்திலுள்ள பத்திரிகையொன்றும் மறு பிரசுரம் செய்திருந்தது.

இதனையடுத்தே முஸ்லிம் மக்கள் தமது அதிருப்தியை வெளிப் படுத்துமுகமாக, உலகளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்தி யுள்ளனர். ஈராக் அரசாங்கமும் தமது அடையாள எதிர்ப்பாக டென் மார்க் நாட்டின் பொருட்களைச் சகல முஸ்லிம் நாடுகளும் இறக்கு மதி செய்யாமல் பகிஷ்கரிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள் ளது. முஹமது நபி அவர்களின் உருவத்தை இவ்வாறு கேலிச்சித்திர மாகப் பிரசுரித்தமையானது தமது மதத்தை அவமதிக்கும் செயல் என முஸ்லிம் மக்கள் தெரிவிக்கின்றனர்.



கொரியா நாட்டிலுள்ள டென்மார்க் தூதரகத்தை, கொரியவி லுள்ள முஸ்லிம் மக்கள் தீ வைக்க முயற்சித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. அவ்வாறே பிரான்ஸ் தூதரகத்தின் மீதும் முஸ்லிம் கள் தாக்குதல்களை மேற்கொள்ள முயற்சித்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டங்கள் மேலும் பல நாடுகளில் வியாபித்துள் ளமையின் காரணமாக உலக நாடுகள் பலவற்றின் பார்வை இச் சம்பவத்தின் மீது பதிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடலில் நேர்ந்த அவலம்!

**1400 இற்கு மேற்பட்ட பயணிகளுடன் சவுதி அரேபியாவிலிருந்து பயணித்த எகிப்திய பயணிகள் கப்பலொன்று செங்கடல் பகுதியில் மூழ்கியதில் ஏராளமானோர் மரணமாகினர். இக்கப்பலில் பயணம் செய்தோரில் அதிகமானோர் எகிப்தியர்கள் எனத் தெரியவந்துள்ளது. இவர்களில் கணிசமானோர் மக்கா பயணத்தை முடித்துக் கொண்டு எகிப்பு திரும்பிக் கொண்டிருந்தவர்களாவர்.**



**இந்த அனர்த்தத்திற்குள்ளானவர்களை மீட்பதற்கென மீட்புப்படையினரின் படகுகளும், ஹெலிகொப்டர்களும் அப்பகுதியை நோக்கி விரைந்தன. 'அல் சலாமி பெரி 98' என்ற பெயரைக் கொண்ட 35 வருடங்கள் பழைமை வாய்ந்த இந்தப் பயணிகள் கப்பலானது இத்தகைய நிலையை அடைந்ததற்கான காரணம் எதுவும் இதுவரையில் சரியாகக் கண்டுபிடிக்கப்படாத நிலையில், அநேகமாகக் காலநிலை சீரற்ற தன்மை காரணமாகவே இந்நிலை ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரியவருகின்றது. மற்றொரு கருத்தின்படி, கப்பலில் தீப்பற்றியதன் காரணத்தினாலேயே இந்நிலை ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. விபத்தையடுத்து எகிப்திய அரசாங்கம் மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த அதேவேளை பிரிட்டிஷ் போர்க் கப்பலொன்றும் அப்பகுதியில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள [illegible] குறிப்பிடத்தக்கது.**

## குடியேற்றவாசிகள் அதிகரிப்பு

வெளிநாடுகளிலிருந்து இங்கிலாந்திற்குள் குடியேறுவோரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக அந்நாட்டின் அரசாங்கம் மேற்கொண்ட கணக்கெடுப்பொன்றின்மூலம் தெரியவந்துள்ளது. இக்கணக்கெடுப்பின்படி இங்கிலாந்திலுள்ள மக்களில் 7 பேரில் ஒருவர் வெளிநாட்டவராக இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு இங்கிலாந்தில் வசிக்கும் குடியேற்றவாசிகளின் மொத்த எண்ணிக்கை 7 மில்லியனுக்கும் அதிகமாக உள்ள அதே வேளை, கடந்த இரண்டு வருடங்களில் மாத்திரம் ஐம்பது லட்சம் வெளிநாட்டவர்கள் இங்கிலாந்திற்குள் குடியேற்றவாசிகளாக வருகை தந்திருப்பதாகவும் இக்கணக்கெடுப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு இங்கிலாந்திற்கு வருவோரில் அநேகம் பேர் சீனா, ஆபிரிக்கா மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆவர். குறிப்பாக இங்கிலாந்தின், லண்டன் நகரை நோக்கியே அதிக எண்ணிக்கையான வெளிநாட்டவர் குடியேறி வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வறுமை, அரசியல் பிரச்சினைகள், உறவினர்களுடன்இணைதல் போன்ற பல காரணங்களின் அடிப்படையிலேயே இவர்கள் இங்கிலாந்து போன்று பல வெளிநாடுகளில் குடியேறி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### அற்லஸ் கேள்வி - 35

**கேள்வி: நபிகள் நாயகம் பற்றிய கேலிச் சித்திரம் எந்த நாட்டுப் பத்திரிகையில் வெளிவந்தது?**

சரியான விடை :..............................

உங்கள் விடையுடன்– பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 35,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 33 இன் சரியான விடை :- 308**

**பரிசு பெறுவோர்**

என்.டிசாந்தினி, தரம் - 9[B],
இந்து மகா வித்தியாலயம், இறத்தோட்டை

பாத்திமா ரிஸ்னா, தரம் - 7, அல் அஸ்ஹர் முஸ்லிம் ம.வி, அலுகொள்ள, போகஹகும்புரை.

குமுதினி யோகநாதன், தரம் - 11[D],
சைவ மங்கையர் வித்தியாலயம், வெள்ளவத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசய வனம்

கலையமுதன் இக்பால் 19



**காட்டுக்குள் 'ஆள்கடத்தான்' செடியில் மிதித்துத் திசை மாறித் திரிபவர்களைக் கண்டுபிடிக்க காட்டுக்குப் போகின்றவர்களும், 'ஆள்கடத்தான்' செடியில் மிதித்தால்தான் காணாமல் போனவர்களின் இடத்தை அடைய முடியும். ஆனால், அது இலகுவான காரியமல்ல. ஆள்கடத்தான் செடி எதுவென்பது எவருக்குமே தெரியாத விடயமாகும்**

விடிந்தும் விடியாததுமாக, பண்டையாவும் மற்றவர்களும் ரெட்டை மாட்டு வண்டில் கட்டிக் காட்டுக் குறுக்குப் பாதையினூடாகப் பண்டாரி வீட்டுக்குப் புறப்பட்டனர். பூக்கள் கொண்டு சரம் தொடுத்துக் கொண்டிருந்த பண்டாரி, பண்டையாவைக் கண்டதும் எழுந்து சென்று கைகளைப் பற்றி வருடி வரவேற்றான். விதைநெல் மற்றும் விளைத்திறனுள்ள மரக்கறி விதைகளையெல்லாம் சகாய விலையிலும், சில சமயம் மானியமாகவும் பண்டாரி, பண்டையாவிடமே வாங்குவது வழக்கம்.

விஷயத்தைக் கேட்டறிந்த பண்டாரி வெற்றிலை, பாக்கு, மஞ்சள், நூற்பந்து, காணிக்கை, கற்பூரம் என்பவற்றைப் பக்தியுடன் வாங்கிப் பிள்ளையாருக்கு ஆராத்தியெடுத்து, சூடம் காட்டி "உலகைச் சுற்றி வர மயிலேறிப் போன தம்பி முருகனை விடத் தனது பெற்றோரையே சுற்றி வந்து, அது உலகைச் சுற்றி வந்ததற்குச் சமமென நிரூபித்து மாம்பழத்தைப் பெற்ற ஞானப்பழமான பிள்ளையாரப்பா, காணாமற் போன உனது இந்தப் பிள்ளைகளையும் கண்டுபிடித்துக் கொடப்பா" என்று வேண்டிக் கண்களை மூடி நிஷ்டையிலாழ்ந்து மந்திரமோதிய வண்ணம்... இருந்தார்.

பிற்பாடு கண்களை விழித்த பண்டாரி தாம்பூலத்தைத் தடவிய வண்ணம் "இரண்டு பெண் குழந்தைகளும், நான்கு ஆண் குழந்தைகளும் தானே காணாமற் போனார்கள்" என்று கேட்ட போது "ஆமாம் சாமி அப்படியேதான்" என்று அனைவருமே பதறியடித்துப் பதில் கூறினர்.

அவர்கள் இப்போது எங்கே இருக்கின்றார்கள்? எப்படி இருக்கின்றார்கள்? எப்படிப் போய்க்கூட்டி வருவது என்றெல்லாம் பண்டையா பதறிக் கொண்டே கேட்டார். மௌனமாயிருந்த பண்டாரி சற்று நேரத்தில் "இதோ பார் மகனே! காணாமற் போன பிள்ளைகளெல்லோரும் பத்திரமாகக் காட்டுக்குள்ளேதான் இருக்கின்றார்கள். ஆனால் சற்றுக் களைப்புற்றுள்ளார்கள். அவர்களது உயிர்களுக்கெல்லாம் எந்தவித ஆபத்துமே கிடையாது. ஆனால் அவர்கள் 'ஆள்கடத்தான்' என்ற திசை மாற்றிப் பூண்டிலே மிதித்ததால் தான் பாதை மாறிக் காட்டிலேயே அலைகின்றார்கள். மந்திரவேத விதிப்படி 'ஆள்கடத்தான்' செடியில் மிதித்துத் திசை மாறித் திரிபவர்களைக் கண்டுபிடிக்கப் போனவர்களும் அந்த 'ஆள்கடத்தான்' செடியிலே மிதித்தால்தான், அவர்கள் காணாமற் போனவர்களின் இடத்தை அடையமுடியும். ஆனால் இது இலேசுப்பட்ட காரியமல்ல. ஆள்கடத்தான் செடி எது என்பது எவருக்குமே தெரியாது.

ஆனால், வேத முறைப்படி, திசை மாறிய; காடு தப்பியவர்களைத் தேடிச் செல்பவர்கள் கையிலே மூன்று மிளகாய்ப்பழங்களும், மூன்று எலுமிச்சம் பழங்களையும் எடுத்து மடியிலே கட்டிக் கொண்டு போகவேண்டும். அதுவும் அப்பழங்கள் மரத்திலேயோ, செடியிலேயோ தான் பழுத்த பழங்களாக இருக்கவேண்டும்" என்று பண்டாரி கூறியபோது அனைவருக்குமே தூக்கிவாரிப் போட்டது.

ஊர்ச்சனம் முழுவதுமே ஒன்றுகூடிப் பழங்களைத் தேடித் தேடி அலைந்தனர். நாயைக் கண்டால் கல் இல்லை. கல்லைக் கண்டால் நாயில்லை என்ற மாதிரிச் சில இடங்களிலே எலுமிச்சம் பழங்களிருந்தன. மிளகாய்ப் பழங்களில்லை. சில இடங்களில் மிளகாய்ப்பழங்களிருந்தன. ஆனால் எலுமிச்சம் பழங்களிமில்லை. சில இடங்களிலே அந்த இரண்டு பழங்களுமிருந்தன. இருப்பினும் அந்த வீட்டிலே சாவு நிகழ்ந்திருக்கின்றது. இப்படி ஏகப்பட்ட அவஸ்தை. சனங்களும் இவற்றினைத் தேடி அலைந்து களைத்தனர்.

வேறு சிலரோ இத்தகைய மந்திரமாயங்கள், சாஸ்திர சம்பிரதாயங்களிலே நடம்பிக்கை கொள்ளாமல் பிள்ளைகளைத் தேடிக் காட்டுக்குள் போய்த்தேடத் தொடங்கினர். பிள்ளைகளின் பெயர்களைச் சொல்லிக் கூச்சலிட்டனர். காட்டிலே தீமூட்டி வெளிச்சம் காட்டினர். உயர்ந்த மரங்களிலே ஏறிச் சீன வெடி, மூலைப்பட்டாசு, சீறுவானம் என்பவற்றைக் கொழுத்தி எறிந்து சத்தம் உண்டாக்கினர். ம்.... ஹூம்.... எதற்குமே பதிலில்லை.

நாட்கள் கடந்தனவே தவிர பிள்ளைகளைக் கண்டறிந்தபாடில்லை. ஊரிலே வதந்திகள் கிளம்பின. சிறு பிள்ளைகள், இவ்வளவு நாளும் உயிருடனிருக்க வாய்ப்பில்லை. ஏதோ கொடிய மிருகங்களிடம் அகப்பட்டிருக்க வேண்டுமெனப் பலவித கதைகள் உலாவின. இதனால் எங்குமே ஒரே அழுகைக் குரல்கள்தான். காட்டிலே விடுதி போட்டுத் தேடப்போனவர்கள் கூட, நாலைந்து நாட்களின் பின்பு ஏமாற்றத்துடன் திரும்பி வந்து கையை விரித்தனர். ஊர் முழுதும் சோகமயம். மயான அமைதி.

(தொடரும்.....)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திட்டமிடல் இருந்தால் பிரச்சினை இல்லை....

அன்றாடம் கொடுக்கப்பட்டுள்ள வேலைகளைக் காலதாமதம் இன்றி எவ்விதம் நிறைவேற்றுவது என்பதே இன்று மாணவர்கள் மற்றும் வயது வந்தோர்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை. ஒரு நாளில் கொடுக்கப்பட்ட வேலைகளில் அனைத்தையும் முடிக்காது விடினும் அதில் 80% சதவீதத்தையாவது நிறைவேற்றக் கூடியதாக இருந்தாலேயே அது உங்களை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதாக அமையும்.

தமக்குக் கொடுக்கப்பட்ட அன்றாட வேலைகளைக் காலதாமதமின்றி எவ்விதம் முடிப்பது என்பதே இன்று மாணவர்கள் மற்றும் வயது வந்தோரின் முக்கிய பிரச்சிகைளில் ஒன்றாக இருக்கின்றது. நீங்கள் உங்களைப் பற்றிச் சிறிது சிந்தியுங்கள்! உங்களுக்குக் கொடுக்கப்பட்ட சகல வேலைகளையும் செய்து முடித்த ஒரு நாளைப் பற்றிச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்! அந்நாளில் நிறைவேற்றப்பட வேண்டிய சகல வேலை களும் உங்களால் நிறைவேற்றப்பட்டதா? ''இல்லை'' என்றே உங்கள் பதில் வரலாம். ஏனெனில் பலருக்கு ஒரு நாளில் கொடுக்கப்பட்ட வேலைகளில் பலதைச் செய்து முடிக்க முடியாமல் போயிருக்கும். குறிப்பிட்ட காலத்தில் ஒரு வேலையைத் தாமதமின்றிச் செய்ய முடியாத ஒரு பிள்ளையாக நீங்கள் இருந்தால் உங்களுக்கு நாம் அவசியமான சில விடயங்களை அறியத் தருகின்றோம்.



## அதிக நட்டம்

வேலைகளைத் தாமதப்படுத்திச் செய்வதன் மூலம் முதலில் அதிக நட்டத்தை அனுபவிப்பவர் நீங்களாகத் தான் இருக்க முடியும். அதுமட்டுமன்றி அதனால் மற்றவர்களுக்கும் நட்டம் ஏற்படும். தாமதம்—முதலில் உங்கள் முன்னேற்றத்தைப் பாதிக்கச் செய்யும். உதாரணமாகக் கவிதை ஒன்றை மனனம் செய்து வரும்படி ஆசிரியர் கூறியுள்ளார் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் நீங்கள் அதனை மனனம் செய்து ஆசிரியருக்கு ஒப்புவிக்கவில்லை. இதற்கு ஆசிரியர் முதலில் உங்களுக்குத் தண்டனை வழங்கலாம். ஆனால் இறுதிப் பரீட்சையின் போது கவிதை மறந்திருக்கலாம். இது நீண்டகால நட்டமாகும். இதன் காரணமாக நீங்கள் வேதனைப்பட வேண்டியிருக்கும்.

முதல் நாளில் அவ்வேலையைத் தாமதப்படுத்தியதன் காரணமாக அதைத் தொடர்ந்த வேலைகளும் தொடர்ந்து வரும் நாட்களில் தாமதமாகலாம். அப்போது வேலைகள் கூடியிருக்கலாம். இந்நிலையில் மேரி கியூரி அம்மையார் கூறிய வசனம் ஞாபகத்தில் வர வேண்டும். ''இன்றைய வேலையை இன்றே செய்ய வேண்டும்'' இதனால் முன் கூட்டியே திட்டமிடல் அவசியமாகும்.

## முன் திட்டமிடல் அவசியம்

முதலில் நாளைய தினத்தில் செய்ய வேண்டிய வேலைகளைச் சிறிது சிந்தியுங்கள். அவற்றில் முக்கியமான வேலைகள் மற்றும் பிற்போட வேண்டிய வேலைகள் என்று இருக்கலாம். இவற்றை ஒரு கடதாசியில் குறித்துக் கொள்ளுங்கள். முதலில் அத்தியாவசியமான வேலைகளை நிரல் படுத்திக் கொள்க. இரண்டாவதாக அத்தியாவசியம் குறைந்த வேலைகள் அதாவது பிறகு செய்யப்பட வேண்டிய வேலைகளை எழுதுக. குறிப்பிட்ட நாளில் செய்யப்பட வேண்டிய வேலைகள் அவற்றைச் செய்ய வேண்டிய நேரங்கள் கொண்ட நிகழ்ச்சி நிரலொன்று இப்போது உங்கள் கையில் இருக்கும். குறிப்பிட்ட நேரத்தில் இரண்டு அல்லது மூன்று வேலைகளைச் சுதந்திரமாகச் செய்ய முடியுமா? என்று நினைத்துப் பார்க்க வேண்டும்.

உதாரணமாகப் பாடசாலைக் கல்வியை முடித்த உங்களுக்குப் பிரத்தியேக வகுப்பு ஒன்றிற்குச் செல்ல வேண்டும் என வைத்துக் கொள்வோம். அதன்பின் இணைப் பாடவிதானச் சங்கக் கூட்டம் ஒன்றிலும் கலந்து கொள்ள வேண்டியுள்ளது. இந்நிலையில் வேலைகளைக் குழப்பிக் கொள்ளலாம். நிதானமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டும். நாளை அதிக வேலைப்பளுவுள்ள நாளாக இருக்கலாம். இந்நிலையில் மற்ற நாட்களை விடக் குறிப்பிட்ட நாளில் முன்கூட்டியே நேரத்துடன் எழும்பலாம் அல்லது வேலைகளை இரவில் முடித்துச் சிறிது நேரம் தாமதித்து நித்திரைக்குச் செல்லலாம். இதன் மூலம் குறிப்பிட்ட நாளின் வேலைகளைத் திட்டமிட்டபடி செய்து முடிக்கலாம். அதன்படி திட்டமிட்டபடி வேலைகள் ஒவ்வொன்றையும் செய்து முடித்த பின் உங்கள் நிகழ்ச்சி நிரலிலிருந்து முடித்த வேலைகளை வெட்டி விடலாம். அத்துடன் நிகழ்ச்சி நிரலில் புதியவற்றைச் சேர்க்க விரும்பினால் அதனை எழுதிக் கொள்ள வேண்டும். இவ்விதமான முன் திட்ட மிடலின் போது கற்றல் நடவடிக்கைக்கு மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகள், பெற்றோர், சகோதர, சகோதரிகளுக்கு, உறவினர்களுக்கு மற்றும் அயலவர்களுக்குச் செய்ய வேண்டிய வேலைகளையும் குறித்துக் கொண்டு செயற்பட்டால் எந்தத் தாமதமுமின்றி வேலைகள் நடைபெறும்.




## முக்கிய காரணி

இத்தகைய முன் திட்டமிடல் மூலம் உங்கள் அன்றாட வேலைகளைப் பிரச்சினை இன்றி, குழப்பிக் கொள்ளாமல், செய்யக் கூடியதாக இருக்கும். ஆனால் ஒன்றை மட்டும் நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். எழுதிய முன் திட்டமிடலுக்கு நீங்கள் அடிமையாகி விடக்கூடாது. எழுதிய முன் திட்டமிடல் நிரலை நீங்கள் மறந்து வைத்து விட்டு வந்திருந்தால் அந்நிரலில் நீங்கள் எழுதிய அனைத்து விடயங்களையும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.


சில வேளைகளில் தயாரித்துக் கொண்ட திட்டமிடல் நிகழ்ச்சி நிரல் காணாமல் போனால் நீங்கள் அதற்கு அடிமையாகிச் சகல வேலைகளும் ஸ்தம்பிதம் அடையக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாம். இதனால் நீங்கள் முன் திட்டமிடல் நிகழ்ச்சி நிரலிற்கு அடிமையாகாமல், முன் திட்டமிடலை உங்கள் அடிமையாக்கிக் கொண்டால் சகல வேலைகளையும் திறம்படச் செய்து முடிக்கலாம்.

எஸ்.கிறேஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதிய பயிற்சி பயனளிக்கிறது



19 வயதிற்குக் கீழானோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் கொழும்பில் நடைபெற்று வருகின்றமை நாம் அறிந்ததே. இப்போட்டிகளில் இந்திய அணி சிறப்பாக விளையாடி வருவதையிட்டு மகிழ்ச்சியடைவதாக இந்திய அணியின் தலைவர் ரவீகாந்த் ஷுக்லா தெரிவித்துள்ளார்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்திருக்கும் இந்திய அணியின் பயிற்றுனரான வெங்கடேஷ் பிரசாத், தமது அணியினருக்குச் சகல அம்சங்களிலும் கூடிய பயிற்சிகள் வழங்கப்பட்டதாகவும், ஒவ்வொரு வீரருக்கும் என தனித்தனியாகப் பயிற்சிகள் வரையறுக்கப்படாமல் அணி முழுதிற்கும் சமகாலத்தில் இவ்வாறு பயிற்சிகள் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். ''நமது அணியின் அனைத்து வீரர்களுமே பொறுப்பாக விளையாடக் கூடியவர்கள். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தொடக்கம் நடுவரிசைத் துடுப்பாட்ட வீரர் வரை மட்டுமன்றி; பின்வரிசை வீரர்களும் கூட போதிய வலுவைக் கொண்டவர்களே! எந்தவொரு போட்டியும் இலகுவான போட்டியாக அமையும் என்று இந்திய அணி கருதுவதில்லை. எல்லாப் போட்டிகளும் எமக்கு முக்கியமானதே! அவற்றிலிருந்து நாம் கற்பதற்கு நிறைய இருக்கின்றன'' எனவும் வெங்கடேஷ் பிரசாத் மேலும் தெரிவித்துள்ளார். மேலும் இந்திய தேசிய அணியின் முன்னாள் வீரராக இருந்த வெங்கடேஷ் பிரசாத்துக்கு இலங்கையில் விளையாடிய முன் அனுபவம் உள்ளமையினால் நாட்டின் காலநிலை, இலங்கை ஆடுகளங்கள் பற்றியெல்லாம் நன்றாகத் தெரியும். அவரது அந்த அனுபவம் 19 வயதிற்குக் கீழானோருக்கான இந்திய அணிக்குப் பயனுடையதாக அமைந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

# சச்சினின் சாதனை!



பாகிஸ்தான்-இந்தியா நாடுகளுக்கிடையே நடைபெற்ற சர்வதேச ஒருநாள் போட்டியின்போது மழை குறுக்கிட்டிருந்த நிலையில் 'டக்வர்க்லுவிஸ்' முறையில் பாகிஸ்தானுக்கு 7 ஓட்டங்களால் வெற்றி வழங்கப்பட்ட போதிலும், இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமான சச்சின் டெண்டுல்கரின் சாதனை மிகு துடுப்பாட்டம் இந்திய ரசிகர்களை ஆறுதலடைய வைத்து விட்டது.

அதாவது ஒருநாள் போட்டிகளில் மொத்தம் 14,000 ஓட்டங்களைப் பெற்று சச்சின் உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

பாகிஸ்தானுடனான போட்டியில் 113 பந்து வீச்சுகளுக்கு முகம் கொடுத்த சச்சின் 10 பவுண்டரிகளும், 1 சிக்ஸரும் அடங்கலாக 100 ஓட்டங்களைப் பெற்றதன் மூலமே அவர் உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார். உலக சாதனையின்படி, தற்போது சச்சின் டெண்டுல்கருக்கு அடுத்தபடியாக பாகிஸ்தான் அணியின் தலைவர் 'இம்சமாம் உல் ஹக்' உள்ளார். இவர் 11,141 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். மூன்றாவது இடத்தில் இருப்பவர் இலங்கை அணியைச் சேர்ந்த சனத் ஜயசூரிய. இவர் பெற்றுள்ள மொத்த ஓட்டங்கள் 10,456.

# கிக் பொக்சிங் இலங்கையிலும்......!

இலங்கையிலுள்ள விளையாட்டுச் சங்கங்களுள் மற்றுமோர் புதிய விளையாட்டுச் சங்கமாக 'கிக் பொக்சிங்' சங்கமும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதன் கீழ் மேற்படி 'கிக்பொக்சிங்' சங்கத்தை உத்தியோகபூர்வமாகப் பதிவு செய்வதற்கு விளையாட்டுத்துறை அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன் மூலம் இலங்கையில் பதியப்பட்டுள்ள விளையாட்டுக்களுள் 60 ஆவது விளையாட்டாக 'கிக்பொக்சிங்' கருதப்படுகின்றது.

கடந்த வருடம் சீனாவில் நடைபெற்ற ஆசிய ஒலிம்பிக் சங்கத்தின் மாநாட்டின் போதே இப்போட்டி உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தமையும், இதற்கான அங்கீகாரத்தை விளையாட்டுத்துறை அமைச்சு தற்போது வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பொதுவாக 'பொக்சிங்' எனப்படும் குத்துச் சண்டைப் போட்டிகளில் கால்களால் தாக்குவதற்கு அனுமதி கிடையாது. எனினும், இந்த 'கிக்பொக்சிங்' முறையிலோ கால்களினாலும் தாக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமையே இங்கு சுட்டிக்காட்டத்தக்க அம்சமாக உள்ளது.




# டெரல் ஹெயார் இலங்கையில்...

சர்ச்சைக்குரிய நடுவராகக் கருதப்பட்ட 'டெரல் ஹெயார்' தற்போது இலங்கைக்கு வருகை தந்துள்ளார். யார் இந்த டெரல் ஹெயார்? அவுஸ்திரேலிய நடுவரான இவர்தான் முத்தையா முரளிதரனின் பந்து வீச்சானது விதிமுறைகளுக்கு முரணாக இருப்பதாகச் சர்ச்சையைக் கிளப்பியவராவர்.

தற்போது இவர் ஏன் இலங்கைக்கு வந்துள்ளார் தெரியுமா?

கொழும்பில் நடைபெறுகின்ற 19 வயதிற்குக் கீழானோருக்கான உலகக் கிண்ணப் போட்டிகளுக்கென சர்வதேச கிரிக்கெட் சபையின் விசேட பிரதிநிதியாகவே இவர் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளார். எனினும், இவர் எந்தவொரு போட்டியிலும் நடுவராகப் பணியாற்ற மாட்டார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. டெரல் ஹெயார் கிளப்பிய சர்ச்சையின் காரணமாகத்தான் சில காலங்களாக முரளிதரன் அவுஸ்திரேலியா செல்வதைத் தவிர்த்து வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச பாடசாலை விளையாட்டுப் போட்டிகள்

இலங்கையிலுள்ள சர்வதேச பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுனர் போட்டிகள் 6 ஆவது வருடமாக இம்முறையும் பெப்ரவரி 17 தொடக்கம் 19 வரை நடைபெறவுள்ளது.

சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள மேற்படி போட்டிகளில் 20 சர்வதேச பாடசாலைகள் கலந்து கொள்ளவுள்ளன.

இதன்படி 2000ற்கும் அதிகமானோர் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இப்போட்டிகள் நுகேகொடை லைஸியம் சர்வதேச பாடசாலையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையில், பாலர் வகுப்பு மாணவர்களுக்கான வருடாந்த ஒளி விழாவின் போது, மாணவியர் வழங்கிய நடனக் காட்சிகளை இவ்விரு படங்களிலும் காண்கிறீர்கள்.



## ஏன்? எப்படி?

★★ பெரிய பிளாஸ்டிக் தொட்டிகளிலோ, பேணிகளிலோ வீழ்ந்து கிடக்கிற இலைகுழைகளை விட நிலத்தில் வீழ்ந்து கிடக்கின்ற இலைகுழைகள் மிக விரைவாகக் காய்ந்து சருகுகளாகின்றன. இவ்வாறு நிலத்தில் காணப்படுபவை மாத்திரம் விரைவாகக் காய்ந்து விடுவதற்கான காரண என்ன?

பொதுவாக மரத்தின் இலைகளானது காய்ந்து போதல் என்பத ஒரு வகை பக்றீரியாக் கிருமிகளின் தாக்கத்தினால் நிகழ்வதாகும். எனவே, இத்தகைய பக்றீரியாக்கள் தரையில் (மண்ணில்) அதிகளவில் காணப்படுகின்றன. அதிலும் இந்த பக்றீரியாக்கள் பரவுவதற்குரிய ஈரலிப்புத் தன்மையும் மண்ணில் காணப்படுவதனால் குறித்த தரையில் வீழந்து கிடக்கின்ற மர இலைகளினுள் அவை இலகுவாக ஊடுருவி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதன் காரணமாகவே அந்த மர இலைகள் விரைவாகக் காய்ந்து சருகுகளாகின்றன.
தொட்டிகளிலோ அவ்வாறல்ல... நிலத்தில் காணப்படும் பக்றீரியா அங்கு அரிதாகவே காணப்படுவதாலும், ஈரப்பதன் அங்கு இல்லாதிருப்பதாலுமே அங்குள்ள இலைகள் காய்ந்து விடுவது தாமதமாக நடக்கின்றது.

★★ கடற்கரையிலுள்ள தென்னை மரங்கள் கடற்பக்கமாகச் சரிந்து காணப்படுவதன் காரணம் என்ன?

மரங்கள் எப்போதும் ஒளித் தொகுப்பின் மூலமே தமது வளர்ச்சியை அமைத்துக் கொள்கின்றன. எனவே, கடற்கரையைப் பொறுத்தவரை அங்கு கடற்பரப்பில் வேறெந்தத் தடைகளும் இல்லாமல் திறந்த வெளி போல் இருப்பதனால் சூரிய ஒளியானது எப்போதும் நேரடியாக இந்தக் கரையோர மரங்களின் மீது படுவதனால் அவை ஒளித்தொகுப்பை அதிகப்படியாக நிகழ்த்துவதனால் இம்மரங்கள் ஒளி வரும் திசையிலேயே வளைகின்றன. உச்சி வெயில் நேரத்திலிருந்து அஸ்தமனம் வரையில் சூரியன் அதிகப்படியாக கடற்பக்கமாகவே இருப்பதனால் தான் இவ்வாறு அப்பக்கத்திலிருந்து கூடிய ஒளித்தொகுப்பும் நிகழ்கின்றது.

## இளம் செய்தியாளர்

'விஜய்' அறிமுகப்படுத்தவிருக்கும் இளம் செய்தியாளர் நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஏராளமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவை தற்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. செய்தியாளராக தெரிவுசெய்யப்படுவோர் பற்றிய விபரங்களும், அவர்களின் புகைப்படங்களும் விரைவில் வெளியிடப்படும்.

## கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு





ஜி.நித்தியஜோதி, தரம் - 10A, க/வெஸ்ஹோல் த.ம.வி, கட்டப்புல.



எஸ்.எப்.ஸஸ்னா, தரம் - 11E, அல் அக்ஸா தேசிய பாடசாலை, கற்பிட்டி.



எம்.ஜே.எப்.சுஹைனா, தரம் - 9H, ஹிலுறியா வித், காத்தான்குடி - 2




சி.வினோஜா, தரம் - 8C, யா/இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.



கே.எப்.பஸ்லா, தரம் - 4, கு/ஹிரல்லான மு.வி, வெல்லவ.



ஏ.எல்.எம்.முனீப், தரம் - 8B, க/ஜமாலியா மு.ம.வி, படகொள்ளாதெனிய, கண்டி.



எம்.ஏ.எம்.ஹாபீஸ், தரம் - 6N, தி/அல் கம்றா ம.வித், தோப்பூர் 4.





வே.மெடோனா, தரம் - 10B, நு/பத்தனை த.வி, கொட்டகலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 குறுக்கெழுத்துப் போட்டி, இல.50

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | |
| | | 5 | க | | |
| 6 | 7 | | 8 | | 9 |
| | 10 | | ஸ் | கொ | |
| | | | 11 | | |
| 12 | | | | | தி |

### மேலிருந்து கீழ்

1. இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தை நடந்த இடம்.
2. சந்திரனின் தேய்வையும் வளர்ச்சியையும் காட்டுவது.
3. இரத்தினத்துக்குப் பெயர்போன ஒரு நாடு. (குழம்பி)
4. இரண்டாகப் பிரிந்த கொம்பை இப்படி அழைப்பர்.
7. அழும்போது வருவது.
9. காலக்கிரமம் என்றும் சொல்லலாம்.

### இடமிருந்து வலம்

1. பௌத்தர்களின் வேதநூல்
5. காலைப்பொழுது (திரும்பி)
6. ஞாயிற்றுத் தொகுதியில் சூரியனிலிருந்து இது நாலாவதாகவுள்ளது.
8. முஸ்லிம்களின் திருத்தலங்களில் ஒன்று.
10. அமெரிக்காவைக் கண்டு பிடித்தவர். (குழம்பி)
11. குயில் கூவுவதைப் போல இது கரையும் (குழம்பி)
12. ஆசியாவின் நீளமான நதி.

குறுக்கெழுத்துப் போட்டி -50
"விஜய்" த.பெ.எண். 2037 கொழும்பு

### போட்டி. இல - 48இன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சா | ர் | க் | 2 மா | 3 நா | டு |
| ர் | | | 4 வ | ரை | |
| 5 ஸ் | 6 பி | 7 ரி | ட் | | 8 அ |
| | 9 ட் | த | ட | ச் | சு |
| 10 உ | டு | பு | ம் | | ர |
| டு | | ப் | | 11 தே | ன் |

**பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்**

எஸ்.குலோத்துங்கன், தரம் - 8C,
மெதடிஸ்ட் மத்திய கல்லூரி, மட்டக்களப்பு.

எஸ்.சிவகுமார், தரம் - 11,
கொட்டகலை த.ம.வி, கொட்டகலை.

ஹனீனா பேகம், தரம் - 9,
அல்-ஹசன் வித்தியாலயம், வேவல்தெனிய.

பெயர் :- ........................................
நிரந்தர முகவரி:- ........................................
........................................
பாடசாலை, தரம், முகவரி :- ........................................
........................................
........................................
நகரம்: ........................ மாவட்டம் :........................

## இடைவெளியை நிரப்புக 1

அ. 1/4, ......., 3/4, 1,........, 1.5, .......

ஆ. 0.25, ........, ........, 2, ......., 2.5

இ. ........, 4, ........, 16, 25, ........, 49

ஈ. 24869, ............, 86924, 69248, ..........., 24869

உ. ............, 83507, ............, ............, 07835, 70538

ஊ. ........, 3, 6, ........, 15, ........

எ. 84, ........, ........, 52, ........, 24, ........


இப்படத்தில் "F" எழுத்தில் வரும் 7 அம்சங்கள் உள்ளன. அதில் (√) அடையாளமிட்டு, அருகில் அதன் பெயரை ஆங்கிலத்தில் எழுதுக. 2



## சரி, பிழை கூறுக. 3

1. புரதச்சத்து மிக்க ஆகாரங்களில் பாணும் ஒன்று. (..........)
2. கண்ணில் வெண்புள்ளி தோன்றுதல் விற்றமின் A குறைபாட்டு நோயாகும். (..........)
3. பறக்க முடியாத பறவை 'கிவி' ஆகும். (..........)
4. தமிழ் நெடுங்கணக்கில் மொத்தம் 248 எழுத்துக்களுள்ளன. (..........)
5. 'கடைக்குச் சென்றேன்' என்ற வாக்கியத்தில் தோன்றா எழுவாய் வெளிப்படையாகவுள்ளது. (..........)
6. ஹரி பொட்டர் என்ற நூல் ஜே.கே.ரோவ்லிங் என்ற பெண்மணியால் எழுதப்பட்டது. (..........)

இந்த யானைக்கு மொத்தம் எத்தனை கால்கள் உள்ளன? 4



அற்லஸ் அறிவுக்கு விருந்து
தயாரிப்பு - நுல்ப்பா கௌஸ்

1, 2, 3, 4 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் உறையிலும் 5ம் இலக்க குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடையை தபால் அட்டையிலும் ஒட்டி கீழுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து 2006.02.22ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 39
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## அறிவுக்கு விருந்து - 36 விடைகள்

**போட்டி : 01** 1. மரக்கிளையில் பாம்பொன்று தொங்கிக் கொண்டிருந்தது. அம்மரத்திலிருந்த குரங்கு மரத்தின் விழுதென நினைத்து, கிளையினில் தொங்கிய பாம்பைத் தொட்டுவிட்டது. அது பாம்பென அறிந்த குரங்கு, எரியும் விளக்கைத் தொட்ட பிள்ளை, நெருப்பு சுட்டதும் வெகுவாகக் குதிப்பதைப் போன்று பயந்து கிளையெங்கும் பாய்ந்து சென்றது. அது மரத்திலுள்ள ஏனைய விழுதுகளையும் பாம்பென நினைத்து மரத்தின் உச்சிக்கே சென்று தனது வாலையும் பாம்பென்று எண்ணி உற்றுப் பார்த்தது.

2. பாம்பு, குரங்கு, பிள்ளை.

**போட்டி : 02** நாயின் உருவம்

**போட்டி : 03**




**போட்டி : 04** ஏறுவரிசையில் எழுதுக.

A. 0.1, 0.19, 0.29, 5.05, 5.25
B. 0.412, 324, 325.25, 419
C. XII, XIX, XXIX, XLIX, LXI

இறங்கு வரிசையில் எழுதுக.


A. 29.0, 1.50, 1.25, 0.29, 0.01
B. 6024, 905, 612, 594, 402
C. MXI, CML, CCII, CXII, XCII

### அற்லஸ் அறிவுக்கு விருந்து - 36 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி : 01 | போட்டி : 02 | போட்டி : 3 | போட்டி : 04 | போட்டி : 05 (குறு.போட்டி-48) |
|---|---|---|---|---|
| எஃப்.அஸ்ஹா, தரம் - 8A, மஹ்மூத் மகளிர் கல்., கல்முனை. | வை.ஜீவகாந்த், தரம் - 4, இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு. | வி.மனோரஞ்சன், தரம் - 8, முஸ்லிம் ம.வித்தி., வெலிமடை. | பா.சிபாரா, தரம் - 6, ஸாஹிரா ம.ம.வி, குருணாகல். | என்.எம்.சிபான், தரம் - 11A, அல்-தாரிக் ம.வி., கந்தளாய். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றிலிருந்து..











# நீர் கொழும்பு கடற்கரையில்

எழுதுபவர் : திலகன்
சித்திரம் : அபயன்

1 தர்மபால இளவரசன் தோற்றத்தில் 'புவனேகபாகு' மன்னனை ஒத்திருந்தமையால் மன்னன் இளவரசனை மிக நன்றாகக் கவனித்துக் கொண்டதோடு அதிக இரக்கமும் காட்டினான். இதைக் கேள்விப்பட்ட மாயாதுன்னை மன்னனின் சகோதரன் புவனேகபாகுவுடன் திரும்பவும் கோபம் கொண்டான். இந்நிலையில் மாயாதுன்னையின் சகோதரன், 'ரயிகம பண்டார' இறக்க அவனது இராச்சியத்தையும் தன் இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டான்.

2 மன்னர்களுள் பேரரசனாக வாழவேண்டும் என விருப்பம் கொண்ட மாயாதுன்னை திரும்பவும் புவனேகபாகுவின் ஆதிக்கத்தின் கீழிருந்த பல பகுதிகளை அழிக்கத் தொடங்கினான். பெறுமதியான வெகுமதிகளைச் 'சமோரின்' மன்னனுக்கு அனுப்பி உதவி கேட்டனுப்பினான். அவனும் மலபார் படைகளை அனுப்பி வைக்க முடிவு செய்தான். அதன்படி மலபார் படைகள் புத்தளத்தில் வந்திறங்க மாயாதுன்னை மன்னன் தன் படையுடன் தலைநகரான கோட்டேயைச் சுற்றி வளைத்தான்.

3 மலபார் சேனைகள் சீதாவாக்கை நோக்கிச் செல்லும் போது நீர்கொழும்புக் கடற்கரையில் முகாமிட்டு நின்றன. மலபார் படைகள் வந்திருப்பதைக் கேள்விப்பட்ட புவனேகபாகு மன்னன் கலவரமடைந்து முதலமைச்சர் 'தம்மிட்ட பண்டார'விடம் ஆலோசனை கேட்டான். அதன்படி கரையோரப் பிரதேசத்திற்கான அதிகாரம் முழுமையாக 'வீதிய பண்டார' இளவரசரிடம் ஒப்படைக்க வேண்டுமென முதலமைச்சர் கூற அதற்கு மன்னன் விருப்பம் தெரிவித்ததோடு பிரதேசம் முழுவதும் இளவரசரிடம் ஒப்படைக்கப்பட்டது.

4 துறைமுகங்களின் பாதுகாப்பு, போர்த்துக்கேயரிடம் ஒப்படைக்கப்பட்டது. வீதிய பண்டார இளவரசன் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட வேலையைத் திறம்படச் செய்தான். இதன் காரணமாக இளவரசனின் திறமை வெளிப்பட்டது. இந்நிலையில் இந்தியாவிலிருந்த போர்த்துக்கேயத் தளபதி 'கோட்டே' நிலவரத்தை அறிந்து கொண்டதோடு புவனேகபாகு மன்னனுக்கு உதவி புரியவெனப் படையணி ஒன்றையும் அனுப்பி வைத்தான்.

5 இது கி.பி 1593 ஆம் நடைபெற்றது. இந்தியாவிலிருந்து வந்த படையணியின் தலைவனாக 'மிகேல் பெரேரா' என்ற சேனாதிபதி இருந்தான். முன்பு அவன் சில காலம் இலங்கையில் தங்கியிருந்தமையால் கொழும்பு நகர் தொடர்பான அனுபவமும் அறிவும் பெற்றிருந்தான். அவன் கொழும்பு வந்தடைந்தவுடனேயே மலபார் படைகளைப் பற்றி அறிந்து கொண்டார். மலபார் படைகளைப் பரம எதிரிகளாகவே போர்த்துக்கேயர் கருதி வந்தனர்.

6 சேனாதிபதி மிகேல் பெரேரா மலபார் படைகளைப் பழிவாங்க வேண்டும் என்று நினைத்தான். முதலில் தனது படைகளுடன் நீர் கொழும்பு நோக்கிச் சென்றான். மலபார் படையினரின் முகாம்களைத் தாக்கினான். அதில் அவன் வெற்றியும் பெற்றான். முகாம் முற்றாக அழிக்கப்பட்டது. மலபார் படையினரில் பலர் மடிந்தனர். சிலர் தப்பியோடினர். சிலரைப் போர்த்துக்கேயர் கைதிகளாக்கினர்.






7 மலபார் படைகளின் கப்பல்கள், படகுகள் மட்டுமன்றிச் செல்வம் யாவற்றையும் போர்த்துக்கேயர் கைப்பற்றிக் கொழும்புக்குக் கொண்டு சென்றனர். கொண்டு சென்றவற்றை மக்களின் பார்வைக்கு வைத்தபின் எரித்தனர். அதுமட்டுமன்றிப் புவனேகபாகுவின் இரு புதல்வர்கள் மிகேல் பெரேரா மற்றும் அவரது படையினரைக் கோட்டேக்கு அழைத்துச் சென்றனர். இதற்கிடையில் மாயாதுன்னை மன்னன் கோட்டேயிலிருந்து பின்வாங்கிச் சீதாவாக்கை நோக்கிச் சென்றான்.

8 புவனேகபாகு மன்னன், மிகேல் பெரேரா உட்பட அனைவரையும் மிக்க மகிழ்வுடன் வரவேற்று உபசரித்தான். வெகுமதிகளையும் வழங்கினான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ஒரு குதிரையின் செருக்கு! 1

- வேணுவாரியத் -




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2006 பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Feberuary 15. 2006

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org